# திருக்கோயில்

பிப்ரவரி 1984 விலை ரூ. 2-00



முகப்பு

வடபத்திரகாளி

அருள்மிகு ஊர்த்துவ தாண்டவர்

திருவாலங்காடு

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 26 | திருவள்ளுவர் ஆண்டு 2015, ருத்ரோத்காரி ஆண்டு - மாசி<br>பிப்ரவரி 1984 விலை ரூ. 2-00 | மணி : 2 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேர்டியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 லிருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25 -லிருந்து ரூ.36 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:**

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 24.00 |
| வெளிநாடு | ரூ. | 36.00 |

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

திருநின்ற செம்மை - ஆசிரியர்

உமைக்கு நல்லான்
—திரு. டாக்டர் இரா. கலைக்கோவன்

சிவஞான போதச் செழும் பொருள்
—ந. ரா. முருகவேள்

அடியார் பெருமை
—கவிஞர் மனசை ப. கீரன்

திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு
—ஆசிரியர்

வயலூர்க் கல்வெட்டுகள்
—திரு. டாக்டர் இரா. கலைக்கோவன்

குடம்பையும் புள்ளும்
—ந. ரா. முருகவேள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# "திருநின்ற செம்மை"

**முன்னுரை :**

'திருநின்ற செம்மை' என்பது திருநாவுக்கரசர் பெருமானின் சிறப்பைக் குறிப்பதற்கு எழுந்த ஓர் அடைமொழித் தொடர். 'திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக்கரசன்றன் அடியார்க்கும் அடியேன்' என வரும் திருத்தொண்டத் தொகையுள், சுந்தரமூர்த்தி சுவாமிகளால் இவ்வடை மொழித் தொடர் வழங்கப் பெற்றுள்ளது. 'அடைமொழிகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்துத் தேர்ந்தெடுத்துத் திறந்தெரிந்து வழங்குதலிற்றான், ஒரு சிறந்த புலவனின் நுண்ணுணர்வு புலனாகும்' (The choice use of adjectives is a fine test for a great poet's originality) என அறிஞர்கள் கூறுவர். இனிமை மிக்க பாடல்கள் இயற்றுதலில் வல்லவராகப் புலவர் பெருமக்களாற் புகழ்ந்து போற்றப் பெறும் ''கபிலரது பாட்டு'' களுள் ஒன்றாகிய 'குறிஞ்சிப்பாட்டு' என்னும் நூலின்கண்,

''ஒண்செங் காந்தள்''
''விரிமலர் அவரை''
''தேங்கமழ் பாதிரி''
''பெருந்தண் சண்பகம்''
''நீள்நறு நெய்தல்''
''முள்தாள் தாமரை''
''நறுந்தணர்க் கொகுடி''
''கொங்குமுதிர் நறுவழை''
''சுடர்ப்பூந் தோன்றி''
''குவியிணர்க் கொன்றை''

என்றாற்போலப் பல்வேறு மரஞ்செடி கொடிகள், அவ்வவற்றிற்கேற்ற அடைமொழிகளால் திறந்தெரிந்து குறிப்பிட்டு விளக்கப்பட்டிருத்தல், கபிலரின் நுண்ணுணர்வைப் புலப்படுத்துதல் காணலாம். இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து காணுங்கால், 'திருநின்ற செம்மை' என்னும் அடைமொழியானது, அதனை வழங்கிய சுந்தரமூர்த்திகளின் நுண்மாண் நுழைபுலனையும், அதனைப் பெறுதற்குரியராகப் பிறங்கிய திருநாவுக்கரசரின் சிறப்பினையும், தெற்றென விளக்குவதாதல் தெளியப்படும்.

**அடைமொழிச் சிறப்பு :**

அடைமொழிகள் ''தினையளவு போதாச் சிறு புல் நீர், நீண்ட பனையளவு காட்டும்படியனவாகும்''. திரு.வி.க. அவர்களின் சிறப்புகளையெல்லாம் 'செந்'தமிழ்த் தென்றல்'' என்னும் ஒரு சிறிய அடைமொழித் தொடர் தன்னுள் அடக்கிக் காட்டி விடுகின்றது. காந்தியடிகளின் கடலனைய மாட்சிமைகளையெல்லாம் தாகூர் 'மகாத்மா' என்னும் சிறிய அடைமொழியில் அடக்கிக் கூறி விளக்கிவிட்டார். அங்ஙனமே தன்னிகரற்ற கவிஞரேறாகிய தாகூரின் பெருமைகளையெல்லாம் 'குருதேவ்' எனக் குறிப்பிட்டுக் காந்தியடிகள் சுருக்கமுற விளக்கினார். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர்பால் தாம் கொண்டிருந்த பேரன்பினையும், பெருமதிப்பினையுமெல்லாம் ''அப்பர்'' என்னும் சிறு சொல்லாற் புலப்படுத்திவிட்டார். 'அப்பர்' என்னும் சொல்லுக்குத் தேசத்தந்தை (Babuji, The Father of the Nation) என்பது பொருள். இச்சிறிய சொற்களில் எத்துணைக் கருத்துச் செறிவும் விரிவும் அமைந்து காணப்படுகின்றன! இவ்வாறு விரிந்த பல பெருங் கருத்துக்களை மிகவும் சுருங்கிய சொற்களிற் செறித்து வைத்துத் திறம்பட விளக்குதல், மிக மேலான வித்தகர்கட்கல்லால் ஏனையோர்க்கு அரிதாகும். இத்தகைய வித்தகம் அமையச் சுந்தர மூர்த்தி சுவாமிகள், அருளிச் செய்த சிறந்ததொரு தொடரே ''திருநின்ற செம்மை'' என்பது.

**உன்னியுணர் பொருள்கள்:**

அடைமொழிகளை வழங்குதல் எத்துணைக் கடினமோ, அத்துணையளவு அதன் பொருட் குறிப்பு நுட்பங்களை உணர்தலும்கூட, மிகவும் கடினமானதேயாகும். 'கண்ணே மணியே' எனத் தாய் தன் குழவியைப் பாராட்டுங்கால், அச்சொற்கள் என்னென்ன பொருள்களை உணர்த்

துகின்றன என்புதனை, அத் தாயேஅறிந்துணர வல்லாளன்றிப் பிறர் உணர்தல் இயலுமோ? அங்ஙனமே,

''மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையோ என்கோ
தாழ்இருங் கூந்தற் றையால் நின்னை''

எனக் கோவலன் கண்ணகியைப் பாராட்டிய புகழுரைகள், நம்மனோர்க்கு வெறுஞ் சொல் லாய்க் கழிவதன்றி, அவன் எய்தி யிருக்கற்பால உளநெகிழ்ச்சி உணர்ச்சித் திறங்களை யெல் லாம் நம்பக்கல் எய்துவிக்குங்கொல்லோ? இது பற்றியன்றோ, ஆசிரியர் தொல்காப்பியர் தாமும் '' உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே'' எனஅருளிச் செய்வாராயினர்!'' ''பொருளது புரைவே புணர்ப்போன் குறிப்பின் மருளற வரூஉம் மரபிற் றென்ப'' எனப் பேரா சிரியர் சுட்டியிருத்தலும் ஈண்டைக்கு உணரத் தகும். எனவே, ''எண்ணம் மிக்கான்'' எனச் சேக்கிழார் சுவாமிகள் சிறந்தெடுத்தோதும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசரைப் பற்றித் 'திருநின்ற செம்மை'என்னும் தொடர் மொழியால் குறிப்பிட்டு எண்ணிய எண்ணங் களையெல்லாம் இன்னவை என அவ்வாறே எண்ணியறிதல் எத்துணையும் நமக்கு இயல்வ தன்று, ஆயினும், அவற்றை இன்னவையாக லாம் என உன்னம் (யூகம்) செய்து, ஓராற்றான் உணர, இயன்ற அளவு முயலுதலில் இழுக் கொன்றுமில்லை யாதலின், அதுபற்றிச் சிறிது கருதி உணர்ந்து மகிழ்வோம்.

### (1) திருவேடத்தியல்பு:

திருநாவுக்கரசரை நினைவார் எவர்க்கும் அவர்தம் சிவவேடப் பொலிவழகே, மனக்கண் முன்னர், முதற்கண் தோன்றும். இடையறாப் பேரன்பும், மழைவாரும் இணைவிழியும், உழ வாரத் திண் படையறாத் திருக்கரமும், சிவ பெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும், நடையறாப் பெருந்துறவும், ஞானப்பாடற் றொடையறாச் செவ்வாயும் உடைய திருநாவுக் கரசரின், சிவவேடப் பொலிவழகு, எவர் நெஞ் சையும் பிணிக்கவல்லதாகும். திருநாவுக்கர சரை நாம் நேரிற்கண்டறியோமாயினும், சிவ னடியார்களின் இயல்புகளையோ, அன்றிச் சிவவேடத்தின் சிறப்பினையோ பற்றி நினைக் குங்காலெல்லாம், திருநாவுக்கரசரை நாம் பெரிதும் நினைவு கூர்கின்றோம். ஆதல் பற் றியே ''இனி பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுவரன் எனக் கண்டு வழிபடுக என்றது'' எனவரும் சிவஞானபோதப் பகுதியின்கண், சிவவேடத்தின் இயல்பினை விளக்குமிடத்து,

''தூயவெண் நீறு துதைந்தபொன்
மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே'' (1)

''சிந்தை இடையறா அன்பும்
திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாங் கருத்தும்
கைஉழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும்
வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத்
தரசும் எதிர்வந் தணைய'' (2)

''கண்ட கவுணியக் கன்றும்
கருத்திற் பரவும் மெய்க் காதல்
தொண்டர் திருவேடம் நேரே
தோன்றிய தென்று தொழுதே'' (3)

என்று போதரும் பெரியபுராணச் செய்யுள் கள் மூன்றனை மேற்கோளாகக் காட்டியருளும் சிவஞானசுவாமிகள், அம்மூன்றனையும் திரு நாவுக்கரசர் பெருமான் ஒருவரைப் பற்றியன வாகவே அமைய எடுத்துக் காட்டியருளினர் போலும். மேலும் ''கருத்திற் பரவும் மெய்க் காதற் றொண்டர் திருவேடம் நேரே தோன்றி யது'' எனத் திருஞானசம்பந்தர் தாமே, திரு நாவுக்கரசரைத் தொழுதனர் எனச் சேக்கிழார் பெருமான் சிறந்தெடுத்துக் கூறியிருத்தலும் சிந்தித்தற்குரியது. இத்தகைய திருவேடத்தின் இயல்பினையே 'திருநின்ற செம்மை' எனச் சுந்தரமூர்த்திகள் விதந்து வியந்து புகழ்ந்த னர் போலும்!

### (2) மனமொழிமெய்கள் மாறாகாமை:

இனி 'செம்மை' என்பதற்கு வேறு பொருள்களும் கொள்ளலாம். தமிழ் மொழி யின் தனிப்பெருஞ் சிறப்பினை விளக்கலுறுவார் அனைவரும், உள்ளத்தின் தன்மை 'உண்மை'- வாயின்தன்மை 'வாய்மை'-மெய்யின் தன்மை 'மெய்ம்மை' எனத் தமிழின்கண் அமைந்துள்ள அரிய சொல்லமைப்பு முறையினையும், அதன் உயரிய குறிக்கோளையும் போற்றிப் புகழ்ந் துரைப்பர். இங்ஙனம் உண்மை-வாய்மை - மெய்ம்மை என அதனதன் இயல்பினைத் தனித்தனியே குறிப்பிடாமல் மூன்றனையும் ஒருங்கே சுட்டலுறின், அங்ஙனம் சுட்டுதற்கு அமைந்த சொல்லே 'செம்மை' என்பது எனலாம். 'வனப்பானது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு' எனப் பேராசிரியர் விளக்கியிருத்தல் போல்வது இது!

''இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு''

எனவரும் திருக்குறள் உரையின்கண், ஆசிரியர் பரிமேலழகர் ''செம்மை; கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறாகாமை'' என விளக்கியிருத்தலும் ஈண்டு உளங்கொளத்தகும். எனவே மனம் மொழி மெய் என்னும் முக்கருவிகளும் தம்முள் மாறாகாமல், திருநாவுக்கரசர்க்குச் சிவ வழிபாட்டில் உறைத்து நின்ற திறத்தினையே 'திருநின்ற செம்மை' எனச் சுந்தரர் வியந்து பாராட்டினார் என்றலும் அமையும்.

''மையற்றுறை ஏறி மகிழ்ந்தலர்சீர்
வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவுஞ் சிவசின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம் அறாவுணர்வும்
ஈறின்றி எழுந்திரு வாசகமும்
கையிற்றிக ழும்உழ வாரமுடன்
கைக்கொண்டு கலந்து கசிந்தனரே''

எனச் சேக்கிழார் பெருமான், திருநாவுக்கரசர் சிவசின்னங்கள் விளங்க, தமது மனத்தின்கண் தியானம் அறா உணர்வும், வாயின்கண் ஈறின்றி எழும் திருவாசகமும், கையின்கண் உழவாரமும் கொண்டு, முக்கருவிகளும் தம்முள் மாறாகாமல் ஒத்து நிற்கத் திருப்பணி செய்தமையினை, நிரல்நிறை அணி அமைய விளக்கியிருத்தல் அறிந்து இன்புறற்பாலது. மேலும், ஈண்டு 'மெய்யுற்ற திருப்பணி' என்பது உண்மைத் தொண்டு எனவும், உடற்றொண்டு எனவும் இருபொருள்பட அமைந்த நயமும் போற்றத்தகும்.

### (3) ஒழுக்க விழுப்பம்:

இனி, 'செம்மை' என்பதற்கு ஒழுக்கம் எனவும், அறம் எனவும் குறிப்புப் பொருள் கொள்ளுதல் அமையும். திருநாவுக்கரசர் சமண சமயம் சேர்ந்திருந்தபோது, இந்நாளிலும் ஒரு சிலர் கூறிவருதல்போல, 'ஒழுக்கமே போதும், கடவுளுணர்ச்சி வேண்டா' எனத் கருதியிருத்தல் கூடும். இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற பிறகே, 'இறைவனுணர்ச்சியில்லாத ஒழுக்கம் ஒரு சிறிதும் பயன் இல்லாதது' என்னும் உண்மையினை, அவர் உணர்ந்தாராகல் வேண்டும்.

''நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய.'' (1)

''புந்திவட்டத் திடைப் புக்கு
நின்றானையும் பொய் என்பனோ?''
(2)

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்;
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி என்று
வெள்கினேன்; வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட் டேனே''

என்பன போன்றுவரும் அவர்தம் திருமொழிகளால் இவ்வுண்மை புலனாகும். இறைவனுணர்ச்சியின்றி வெறும் ஒழுக்கம் மட்டுமே அமையுமெனின், இயற்கை நெறி சிறிதும் பிறழாது தத்தமக்கு அமைந்த வகையில் அன்று தொட்டு இன்றளவும் தவறாது நடந்து வரும் விலங்குகள்தாமே, விழுப்பம் உடையனவாகக் கருதப்பெறுதல் வேண்டும் எனவே, இறைவனுணர்ச்சியோடு கூடிய ஒழுக்கமே ஒழுக்கம் (திருநின்ற செம்மையே செம்மை) ஆகும்என்று, திருநாவுக்கரசர் பெருமான் தெளிந்துணர்ந்து வாழ்ந்து காட்டினார். அச்சிறப்புப் பற்றிச் சுந்தரமூர்த்திகள் ''திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசர்'' எனப் போற்றியுரைப்பாராயினர் எனக் கொள்ளுதலும் பொருந்தும் எனலாம்.

### (4) அறத்திறம்:

இங்ஙனமே, திருநாவுக்கரசர் தமது இளமையில், ''தயாமூல தன்மம்'' என்னும் சமணர் கொள்கையைத் தழுவி, ''ஒருவன் நற்செயல்களை-கடமைகளை-அறங்களைச் செய்தாலே போதும், கடவுளுணர்ச்சியும் வழிபாடும் உடையனாதல் வேண்டுவதில்லை' என்னும் கொள்கையுடையராக ஒழுகி வந்தனர் போலும். திருநாவுக்கரசர் தமதுஇளமைக்காலத்திலேயே,

காவளர்த்தும் குளந்தொட்டும்
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும் நானிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத
ஈகைவினைத் துறை நின்றார்''.

ஆயினும், அவ்வறச் செயல்கள் இறையுணர்ச்சியோடு கூடிய உயரிய நோக்கினவாய் நிகழ்ந்தில என்பது,

தேசநெறி, நிலையாமை
கண்டறங்கள் செய்வாராய்,
ஆசில்அறச் சாலைகளும்
தண்ணீர்ப்பந் தரும் அமைப்பார்''

எனச் சேக்கிழார் சுவாமிகள் கூறுதலாற் பெறப்படும். இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற பிறகே, பசுபுண்ணியம் பதிபுண்ணியங்களுக்குள்ள இடையீடும், ''அரன் அடிக்கு அன்பு செய்கை மாண்பு அறம்'' ''அரன்றன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம் வீண்செயல்'' ''அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்-பரனடிக்கு அன்பில்லாதார் புண்ணியம் பாவமாகும்'' என்பனபோன்ற உண்மைகளும், திருநாவுக்கரசர்க்கு விளங்கினவாதல் வேண்டும். ஆட்கொள்ளப் பெறா நிலையில் 'இரப்பவர்க்கு நான் ஈகின்றேன்' என்னும் தன்முனைப்பு அவர்பால் நிகழ்ந்திருக்கும். ஆட்கொள்ளப் பெற்ற நிலையில் ''யான்

செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும் இக்கோணை, ஞானஎரியால் வெதுப்பி நிமிர்த்துத் தான்செவ்வே நின்றிருப்பார்''. எனவே அப்போது அவர்க்கு இறைவனே என்னை '' இரப்பவர்க்கு ஈய வைத்தான் '' என்ற அருளுணர்வு மேலோங்கி நின்றது. ''அல்லார் கண்டத்து அண்டர்பிரான் அருளாற் பெற்றபடிக்காசு, பல்லாறியன்ற வளம்பெருகப், பரமன் அடியார் ஆனார்கள் எல்லாம் எய்தி உண்க'' என்புழி, முன்போலன்றி அவர்க்கு அருளுணர்வே மேம்பட்டு முனைத்து விளங்கி நின்றமை காண்க. இந்நிலையின் சிறப்பை வியந்து பாராட்டுதற் பொருட்டும் 'திருநின்ற செம்மை'த் திருநாவுக்கரசர் எனச் சுந்தரமூர்த்திகள் அருளிச் செய்தனராதல் கூடும். இவையன்றி,

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையுள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையும் அன்றே''

என்றாற்போல வரும் திருநாவுக்கரசர் திருமொழிகளும் பிறவும், ஈண்டு இயைபுபடுத்து எண்ணி யுணர்தற் குரியன.

(5) அழுந்திய பயிற்சி!

இன்னோரனைய உன்னங்(யூகங்)கள்ஒருபுறம் இருப்ப, உண்மையான் நோக்கலுறுவார்க் குரைக்கத்தகுவது ஒன்றுளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், கல்வி கேள்விகளில் வல்லவர். தொல்காப்பியம் திருக்குறள் சங்க இலக்கியங்கள் என்பனவற்றை அவர் நன்கினிது கற்றுணர்ந்திருந்தார் என நாம் துணிதற்குச் சான்றுகள் பல உள்ளன. இறைவனைக் ''கற்ற கல்வியினும் இனியான் '' என அவர் குறிபிடுதலும், ''அளவில் தொல் கலைகள் ஆய்ந்து திருமலி சிறப்பின் ஓங்கித் திருமணப் பருவம் சேர்ந்தார்'' எனச் சேக்கிழார் பெருமான் அவரைக் குறித்துப் பாடியிருத்தலும் பிறவும் இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும், மேலும், எத்துணைப் பெரியவர்களின் வாக்கையும், அவர்கட்கு முன்னர் இருந்த பெரியவர்களின் வாழ்க்கையால் உந்தப்பெற்று-உருப்பெற்று - உயர்வடைந்தொளிரும். தவத்திரு. ஞானியார் சுவாமிகளின் வாழ்க்கையால் தம்முடைய வாழ்க்கை வளம்படப் பெற்றோர் மிகப் பலராவர். அத்தகைய ஞானியார் சுவாமிகளின் வாழ்க்கையும் வளம்பெற உதவினோர், அவர்க்கு வழிகாட்டிகளாய் முன்னிருந்த எத்துணையோ பல பெரியோர்கள் ஆதல் கூடும். காந்தியடிகள் இஞ்ஞான்று உலகப்புகழ் பெற்று ஒளிரும் சான்றோராயினும், அவர் அந்நிலை அடைதற்குரிய முறையில், அவர்தம் வாழ்க்கையைச் செம்மையுற மாற்றித் திருத்தியமைத்துத் தத்தம் நூல்களால் வழிகாட்டிகளாய் உதவினோர் ஒரு ரஷ்யரும் ( Tolstoy - The Kingdom of God is within you), ஓர் ஆங்கிலேயரும் (John Ruskin-Unto the last), ஓர் அமெரிக்கரும் (Henry David Thoreau-Civil Disobedience) பிறரும் ஆவர் எனக் காந்தியடிகளே உடன்பட்டுக் கட்டுரைத்தலைக் காண்கின்றோம். மேலும்,

''பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபுடச் சேய வாயினும், தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு, என்றும்
சான்றோர் சான்றோர் பாலர் ஆப''

எனப் புறநானூறு பாடுவது, பொருள் பொதிந்த மொழியே யன்றோ? இக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து காணுங்கால், நம் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கும், அவருக்கு முற்பட்ட பல பெருஞ் சான்றோர்களும், அவர்கள் அருளிச் செய்த அரிய பல நூல்களும் வழிகாட்டிகளாய் உதவியிருத்தல் கூடும் எனக் கருதுதல் தவறாகாது. ஈண்டைக்குச் சிறப்பாக, சுந்தரர் திருநாவுக்கரசரைத் தமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டு, அவர்தம் திருப்பதிகங்களை அழுந்திக் கற்றறிந்து உணர்ந்தொழுகி வந்தார் எனத் துணிந்து கூறலாம். ''ஞானத்தால் தொழுவார்கள் தொழக் கண்டு ஞானத்தால் உனை நானும் தொழுவனே'' என்றதனை ஒட்டி, ''தொண்டாடித் தொழுவார்கள் தொழக் கண்டு தொழுதேன் என் வினைபோக'' எனவும், ''பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளேல்லாம் பிறவா நாளே'' என்றதனைத் தழுவி''ஓவும் நாள் உணர்வொழியும் நாள் உயிர்போகும்நாள் உயர்பாடைமேற் காவும்நாள் என்றிவையலாற் கருதேன்'' எனவும் பிறவாறும், பலவிடங்களில் திருநாவுக்கரசரின் சொற்பொருட் குறிப்புகள் அமையச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியிருத்தல் இக்கருத்திற்கு அரண் செய்யும். இன்னோரன்னவற்றையெல்லாம் ஏரல் எழுத்துப்போல்வதோர் விழுக்காடு' எனக்கொண்டு புறக்கணித்தல் பொருந்தாது. ''இணைகொள் ஏழெழுநூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக் கரையன்'' என்றதும், திருநாவுக்கரசர் திருப்பதிகங்களிற் சுந்தர மூர்த்திகள் பெற்றிருந்த அழுந்திய பயிற்சி இனையதென அறிய, அரிய உரிய சான்று பகரும். இத்தகைய சிறந்தபெரும் பயிற்சியின் விளைவாக எழுந்ததே 'திருநின்ற செம்மை' என்னும் செழும் பொருட்டொடர் எனலாம்.

(6) சிவன் எனும் ஓசை:

சைவசமய ஆசிரியர்களின் காலத்திற்கு முன்னரே இத் தென்றமிழ் நாட்டிற் சிவ வழிபாடு இனிது நிகழ்ந்து போந்ததாயினும், 'சிவம்' 'சைவம்' என்னும் சொற்கள் பண்டைச் சங்க நூல்களில் யாண்டும் பயின்றுவரக் காண்கின்றிலம். 'பிறவாயாக்கைப் பெரியோன்' 'நுதல்விழி நாட்டத் திறையோன்' 'மழுவாள் நெடியோன்' 'ஆலமர் செல்வன்' என்றாற்போலவே பண்டைச் சங்க நூல்களிற் சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்கள் காணப்பெறுகின்றன.

மாணிக்கவாசகர் முதலிய நம் சமயாசிரியர்களின் நூல்களில்தான் 'சிவம்' என்னும் சொல் பெரிதும் பயின்று காணத் தலைப்படுகின்றது. எல்லாம் வல்ல இறைவனைக் குறித்தற்கு வேறுபிற சொற்களைக் காட்டிலும் 'சிவம்' என்னும் செந்தமிழ்ச் சொல்லே சிறப்புடையதெனத் தெளிந்து துணிந்து, நம் சமயாசிரியன்மார்கள் பெரிதும் போற்றிவழங்கத்தலைப்பட்டனர். இறைவன் - இயவுள் -கந்தழி-கடவுள்-முனைவன் முதலிய சொற்களைப் கோல முழுமுதற் பெரும் பொருளின் ஒவ்வொரு வகை இயல்பினையே குறிப்பதாகாமல், அதன் எல்லா வகை இயல்புகளையும் ஒருங்கினிது குறிக்கும் பெருஞ் சிறப்புடைய சொல்லாக, நம் சமயச் சான்றோர்களால் 'சிவம்' என்னும் செஞ்சொல் செவ்விதிற்றேர்ந்து அமைத்துக் கொள்ளப்பெற்றது போலும்! அதுபற்றியே,

''சிவன் எனும் நாமம் தனக்கே
யுடைய செம்மேனி விம்மான்''

எனவரும் திருநாவுக்கரசர் திருமொழியும் எழுந்தது.

''மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகம் சேட்டித்தது
என்னும் மறையின் இயல்மறந்தாய்-சொன்னசிவன்
கண்ணா உளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்
எண்ணான் சிவன் அசத்தை இன்று'' [காண

எனவரும் சிவஞானபோத வெண்பாவின்கண், ஆசிரியர் மெய்கண்டார் 'சிவன்' என்னும் சீரிய சொல்லைப்பேரின்பகாரணன்-முற்றுணர்வினன் -தூய தன்மையன் என்னும் வெவ்வேறு பொருள்கள் அமையுமாறு வழங்கியிருத்தல் ஈண்டுக் கருதியுணர்ந்து இன்புறற்பாலது. இவ்வாற்றால் 'சிவம்' என்னும் செஞ்சொல் இறைமைக்குணங்களை யெல்லாம் ஒருங்கினிது குறிக்கும் பெருஞ் சிறப்புடையதாதல் பெறப்படும். இத்தகு பெருஞ்சிறப்பினை, முதன்முதலில்,

''சிவன் எனும் ஓசையல்லது அறையோ
உலகில் திருநின்ற செம்மை யுளதே?''

என அறைகூவி வினவி, யாவருக்கும் ஆணித்தரமாக அறிவுறுத்தருளியவர் திருநாவுக்கரசர்ரே யாவர். இவ்வுண்மை யுணர்ந்து வியந்துவந்தே ''திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசர்'' எனச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதித்தருள்வாராயினர் எனக் கொள்ளுதல், சிவநெறிச் செல்வர் அனைவரும் ஒரு சேர ஒப்ப முடிந்த உண்மையாகும்.

— ஆசிரியர்.




சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவில்,
அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் பார்வையிடுதல்.

# "உமைக்கு நல்லவன்"

திரு. டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சிராப்பள்ளி

நால்வர் என்று போற்றிப் புகழப்படும் சைவசமயக் குரவர்களுள் சமகாலத்தவரான அப்பரும் சம்பந்தரும் இணைந்து பாடிய திருக்கோயில்கள் சில. இப்பெருமக்கள் தனித்தனியே கண்டு பாடிய பதிகள் பல. இருவரில் ஒருவர் பதிகம் மட்டுமே பெற்ற கோயில்களும் உண்டு. கோனேரிராசபுரம் என்று வழங்கப்படும் திருநல்லத்து அருள்மிகு உமாமகேசுவரர் திருக்கோயில் இதில் இரண்டாம் வகையைச் சேர்ந்தது. இத்தலத்து இறைவனை அப்பர் ஒரு பதிகத்தாலும், சம்பந்தர் ஒரு பதிகத்தாலும் பாடிப் பரவியுள்ளனர்.

அங்கோல் வளைமங்கை காண அனலேந்திக்
கொங்கார் நறுக்கொன்றை சூடிக் குழகாக
வெங்காடு இடமாக வெந்தீ விளையாடும்
நம்கோன் நமையாள்வான் நல்லம் நகரானே

என்பது சம்பந்தரின் அருள்வாக்கு நாவுக்கரசர் பெருமான்,

தமக்கு நல்லது தம்முயிர் போயினால்
இமைக்கும் போது இராது இக்குரம்பைதான்
உமைக்கு நல்லவன் தான் உறையும்பதி
நமக்கு நல்லது நல்லம் அடைவதே'

என்று இத்தலத்து இறைவனைப் போற்றி மனங்கசிந்து பாடுகிறார். அப்பரடிகளால் 'உமைக்கு நல்லவன்' என்று நெஞ்சுருக அழைக்கப்படும் இறைவன் வாழும் இத்தலம், கோனேரிராஜபுரம் என்ற பெயருடன் தஞ்சைமாவட்டத்தில், கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் வழியில், பதினெட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புதூரிலிருந்து கிழக்குப் புறமாகச் செல்லும் மண்பாதையில், மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் கோபுரமற்ற நுழைவாயிலைக் கடந்ததும், நீண்டமண்டபமொன்று நம்மை வரவேற்கிறது. இம்மண்டபத்தின் கூரையில் இக்கோயிலின் தலபுராணம் ஓவியங்களாய்த் தீட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் வடபுறத்தில் அம்மன் கோயிலுக்குச் செல்லும் வழி அமைந்துள்ளது. இவ்வசந்த மண்டபத்தை அடுத்த மூன்றுநிலை உட்கோபுர வாயில் வழியே உள்நுழைந்ததும், அழகிய முகமண்டபம் எதிர் கொள்கிறது. இம்மண்டபத்தின் வலப்புறத்தில் ஒன்பான் கோள்களுக்கான மேடை காணப்படுகிறது. இடப்புறத்தில் கிழக்குப் பார்த்த நிலையில் முருகன் தன் தேவியருடன் எழுந்தருளியுள்ளார். இடது கோடியில் தமிழகத்தின் புகழ் வாய்ந்த செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பான்மையன இக்கோயிலைக் கற்றளியாக்கிய செம்பியன் மாதேவியார் காலத்தில் வார்க்கப்பட்டவையாகும். கண்டராதித்த சோழனின் துணைவியாரும், உத்தம சோழதேவனின் தாயாருமான இவ்வம்மையின் இறைப்பற்றும், தெய்வத் திருப்பணிகளும் தமிழகத்துக் கலைவரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கவையாகும். அவர் தன் காலத்தில் கற்றளிகளாக மாற்றிய செங்கல் தளிகள் பலவாகும். அப்பெருமாட்டியால் செய்தளிக்கப்பட்ட செப்புத் திருமேனிகளும், அவர் காலத்திய சிற்ப வடிவங்களும் ஈடுஇணையற்ற அழகுடையவை. செம்பியன் மாதேவி கலைமுறை என்றே ஒரு புதிய தலைமுறையைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் அப்பேரரசி.

செம்பியன் மாதேவி இக்கோயிலுக்குச் செய்தளித்த செப்புத்திருமேனிகளுள் பேரெழில் மிக்கவை, முப்புரம் எரித்த இறைவரும், காளையூர்தியுடன் காட்சியளிக்கும் இறைவனின் திருக்கோலமும்தான். முப்புரம் எரித்த இறைவர் மிகப்பெரும் வடிவினராய்த் தன்தேவியருடன் எழுந்தருளியுள்ளார். வலது முன்கரம் அம்பைப் பிடித்திருக்கும் கோலத்திலும், இடது முன்கரம் வில்லைக் கொண்டிருக்கும் கோலத்திலும் வடிக்கப்பட்டுள்ளன. வலது பின்கரத்தில் பரசுவும், இடது பின்கரத்தில் மானும் உள்ளன. இறைவியின் வடிவம் முவ்வளைவுக் கோலத்தில் அழகின் சிகரமாய் வார்க்கப்பட்டுள்ளது. முப்புரம் எரித்த இறைவனின் முகத்தில் பெருமிதமும், வீரம் நிறைந்த ஆண்மைப் பொலிவும் நிறைந்திலங்கும் அழகு காண்போரைக் கருத்திழக்க வைக்கவல்லது.

காளைத் தேவராய், ரிஷபதேவர், இறைவன் இறைவியுடன் காட்சி தரும் இன்னொரு செப்புத் திருமேனியும் கண்ணில் நிறையும் அழகு வாய்ந்தது. இதில் இறைவன் இடது

காலை ஊன்றி, வலக்காலை இலேசாக வளைத்து, வலது பின்கரத்தில் பரசுவும், இடது பின்கரத்தில் மானும் கொண்டு எழில் ததும்பக் காட்சி தருகிறார். இறைவனின் வலது முன்கரம் அலவன் முத்திரையில் (கடக முத்திரை) எதையோ பிடிப்பது போன்ற மெய்ப்பாட்டில் காட்டப்பட்டுள்ளது. ஆகம விதிப்படி இக்கரத்தில் வக்ர தண்டாயுதம் இருக்க வேண்டும். இப்படிமத்தில் அப்படைக் கருவி காணப்படவில்லை. இடது முன்கரம் முழங்கையில் வளைக்கப்பட்டு மீண்டும் மணிக்கட்டில் கீழ்நோக்கிச் சரிக்கப்பட்டுள்ளது இக்கரம் காளையின் தலைமீது வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப்படிமத்தில், இறைவனின் இடப்புறம் நிற்கும் காளை, தன் நாவால் இறைவனின் இடது முன்கரத்தை அன்போடு தட்விக் கொடுப்பதுபோல காட்டப் பட்டுள்ளது. இது விதியை மீறியதென்றாலும் இங்கு வார்ப்புக் கலைஞனின் கற்பனை நெஞ்சைத் தொடுகிறது. இறைவனும் காளையும் ஒரே தளத்தில் அமைக்கப்பட்டுள்ளனர்.

தேவியின் வடிவம் முவ்வளைவுக் கோலத்தில் தனித்தளத்தில் காணப்படுகிறது. இத்தேவியின் இடது கரத்தில் நீலோத்பவமலர் காட்டப்பட்டுள்ளது. வலது முன்கரம் இன்னொரு கரத்தைப் பற்ற முனைவது போல், அல்லது எதையோ பெறுவதுபோல் நீட்டப்பட்டுள்ளது. ஆகமவிதிப்படி காளைத் தேவரின் அருகிருக்கும் தேவியின் வலக்கரம் முழங்கை அள்வில் மடிக்கப்பட்டு, கரத்தில் மலர் காட்டப் பெற வேண்டும். இடதுகரம் தொங்கும் கரமாக அமைய வேண்டும். இங்கு இரண்டு கரங்களும் அப்படி அமையாதது மட்டுமின்றி, மணவழகர் கோலத்துக்குரிய (கல்யாண சுந்தரேசுவரர்) மெய்ப்பாட்டில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மணவழகர் கோலத்தில் தேவியின் வலதுகரம் இறைவனின் கரத்தைப் பற்ற நீட்டப்பெற்றிருக்க வேண்டும்; இடது கரத்தில் மலர் இருக்க வேண்டும். இது ஆகமங்கள் கூறும் இலக்கணம். இந்தக்காளைத் தேவரின் தேவி மணவழகர் தேவிக்குரிய கோலத்தில் அமைந்துவிட்டதால்தான், பல பேரறிஞர்கள் இப்படிமத்தை இன்ன வடிவம் என இனம் காண்பதில் குழம்பியுள்ளனர். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் இப்படிமத்தை மணவழகர் படிமம் என்றே தவறாகக் குறிப்பிட்டுள்ளார்கள். மணவழகர் படிமத்தில் காளை இருக்க முடியாது. காளையுடன் இறைவனும் இறைவியும்காணப்பட்டால் அப்படிமத்தைக் காளைத் தேவராகத்தான் கொள்ள முடியும். மேலும் ஆகம விதிப்படி, மணவழகர் கோலத்தில் காட்டப்படும் இறைவனின் வலது முன்கரம், இறைவனின் நீட்டப்பட்ட கரத்தைப் பற்றுவதுபோல், திருமணக் குறிப்பு காட்டி நீட்டப்பட்டிருக்க வேண்டும். இடது முன்கரம் அருள்முத்திரையில் (வரதம்) காட்டப்பெறல் வேண்டும். திருமணஞ்சேரியிலுள்ள மணவழகர் வடிவம், திருவேள்விக்குடியிலுள்ள மணவழகர் வடிவம், இவை ஆகம விதிப்படி அமைந்தவை. இவற்றின் படங்களையும் திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தன் நூலில் பதிப்பித்துள்ளார். இருந்தும் திருநல்லத்துக் காளைத்தேவர் படிமத்தை படிமமென்று தவறாகக் குறித்துள்ளார். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இக்கோயில் கல்வெட்டு ஒன்றிலேயே இந்தக் காளைத்தேவர் செப்புத்திருமேனி குறிக்கப்பெறுவதுதான். திரிபுராந்தகர், ரிஷப தேவர், கணபதி ஆகிய உலோகத் திருமேனிகளுக்குப் பால் தயிர் வெண்ணெய் சர்க்கரை தேன் என்பவற்றால் முழுக்காட்டும் செலவு' என்று உத்தமசோழனின் எட்டாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதைத் திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் தன் நூல்களில் குறித்துள்ளார். மணவழகர் வடிவத்தைப் பற்றி எந்தக் கல்வெட்டிலும் யாதொரு குறிப்புமில்லை. இந்நிலையில் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இப்படிமத்தை மணவழகராய்க் குறித்தது எப்படி என்பது விளங்கவில்லை. இக்கோயிலாரும் இப்படிமத்தை மணவழகர் படிமமாகவே கருதி வருவது வேதனைக்குரியது.

இப்படிமத்துடன் காணப்படும் தேவி, மணவழகர் கோலத்துக்குரியதாக இருப்பதே இக்குழப்பங்களுக்கெல்லாம் காரணம். காளையும் இறைவனும் ஒரே தளத்தில் இருக்க, இறைவி தனித்தளத்தில் இருக்கிறார். ஒரு வேளை இந்தத் தேவி, காளைத்தேவர் தேவியாக இல்லாதிருக்கலாம். வேறேதேனும் மணவழகர் செப்புத் திருமேனி இக்கோயிலில் இருந்து இப்போது மறைந்திருக்கலாம். இத்தேவி அதனுடன் தொடர்புடையதாய் இருக்கலாம். இவையெல்லாம் ஊகங்களே. தேவியின் கோலத்தை அடிப்படையாகக் கொண்டு இத்திருமேனிகளை மணவழகர் கோலமாய்க் கொள்வது மிகத் தவறாகும். பெரும்பாலும் ஆகம வழியே வார்க்கப்பட்டு, கல்வெட்டிலும் குறிக்கப்பட்டு செம்பியன் மாதேவியால் செய்தளிக்கப்பட்ட காளையும் இறைவனுமான இத்தோற்றம் காளைத்தேவர் படிமமே என்பதில் எள்ளத்தனை ஐயமுமில்லை.

இக்கோயிலில் மூன்று ஆடவல்லான் திருமேனிகள் காணப்படுகின்றன. இவற்றுள் இரண்டு திருமேனிகள் குறிப்பிடத்தக்கவை. செப்புத்திருமேனிகள் வைக்கப்பட்டுள்ள கூடத்தில் வலது மூலையில் காணப்படும் ஆடவல்லான், செம்பியன்மாதேவி காலத்துப் படிமம் என்று கலையியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். வழக்கமாக எல்லாக் கோயில்களிலும் காணப்படும் ஆனந்தத் தாண்டவக் கோலத்தில் இப்படிமம் அமைந்துள்ளது.

தனியறையில் வைக்கப்பட்டுள்ள ஆடவல்லானின் நெடிய திருமேனி வீசிய கரத்துடன், வார்ப்புக் கலையின் வடிவழகுச் சாதனையாய் நிறுவப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே மிகப்பெரிய நடராச வடிவமென்று போற்றி வணங்கப்படும் இத்திருமேனியின் அருகே சிவகாமி அன்னையின் எழிற்கோல வடிவமும் காணப்படுகிறது. இறைவனின் வலதுமுன்கரம் காப்பு முத்திரையிலும், இடது

(தொடர்ச்சி 25ம் பக்கம் பார்க்க)

# சிவஞானபோதச் செழும்பொருள்

(முற்றொடர்ச்சி)

## ஐந்தாம் சூத்திரம்

''விளம்பிய உள்ளத்து, மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந்து அறியா: ஆங்கு அவை போலத்
தாம்தம் உணர்வின் தமிஅருள்,
காந்தம் கண்ட பசாசத்து அவையே!

**சூத்திரப் பொருள் :**

மேலை நூற்பாக்களிற் கூறிப்போந்த உயிரினால், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பொறிகளும் பிறவும், தத்தம் நுகர்பொருள்களை 'இஃது இன்னது' என்று அளவிட்டு அறியும்; அறிந்தும், அங்ஙனம் அறிந்த தம்மையும், தம்மை ஊர்ந்து நின்று செலுத்தும் உயிரையும், அப்பொறி புலன் கரணங்கள் அறியமாட்டா. அதுபோலவே உயிர்களும் தமது அறிவிற்குத் துணையாகிய முதல்வனது சிற்சத்தியாகிய திருவருளால் இருவகை ஐந்தவத்தையினின்று வினைப்பயன்களை அறிந்து நுகரும்; நுகர்ந்தும், அங்ஙனம் அறிந்து நுகரும் தம்மையும், தம்மைச் செலுத்தி நிற்கும் முதல்வனது திருவருளையும் அறியமாட்டா. காந்தத்தின் முன்னிலையில் இரும்பு ஈர்ப்புண்ணுமாறுபோல, முதல்வனின் முன்னிலையில் உயிர்கள் வினைப்பயன்களை உணர்ந்து நுகர்ந்து வரும். முதல்வன் கருவிகளானன்றிக் கருத்தால் மட்டுமே உயிர்களைச் செலுத்தி நிற்பானாதலின், அதுபற்றி முதல்வன் திரிபுடையனாதல் இல்லை என்பது, இச்சூத்திரத்தின் உட்பொருளாகும்.

மேலை நான்காம் சூத்திரத்துள், ஆன்மா அந்தக்கரணங்களோடு கூடி அமைச்சரும் அரசனும்போல நின்று ஐந்தவத்தைகளை எய்தும் என்பது விளக்கப்பட்டது. எனவே, ஐந்தவத்தைகளை எய்துங்கால் ஆன்மாவிற்கு அந்தக்கரணங்களின் உதவியே சாலும், இறைவனின் துணை வேண்டுவதன்று போலும் என ஓர் ஐயுறவு நிகழ்தல்கூடும். அதனை நீக்கி, இறைவனது உதவியின் இன்றியமையாமையினை நுதலுதல், இச்சூத்திரத்தின் நோக்கமாகும். நிறுத்தமுறையால் இச்சூத்திரம் பாச இலக்கணம் கூறுகின்றது.

(1) **சாங்கியர்:**

ஐம்பொறிகள் ஆன்மாவின் துணையினாலேயே பொருள்களை உணர்ந்து வருகின்றன. ஆனால், சாங்கியர்கள், ஆன்மாவானது தாமரை இலையின் நீர்போற் பற்றற்று நிற்ப, ஆன்மாவின் முன்னிலையிற் புத்தி தத்துவமே ஐம்பொறிகளின் வழியாகப் பொருள்களை உணர்ந்து நுகர்ந்துவரும் என்னும் கருத்துடையராதலின், ஆன்மா அந்தக்கரணங்களோடு கூடி அவத்தைப்படும் என்பது எவ்வாறு பொருந்தும்? என வினவுவர்.

ஆன்மாவானது ஐம்பொறிகளோடும் ஏனைக்கருவிகளோடும் ஒற்றுமைப்பட்டு நின்றாலன்றி, அப்பொறி புலன் கரணங்கள் எல்லாம் ஒருபொருளையும் அறிந்து நுகரும் வன்மையுடையனவல்ல. அரசன் அத்தாணி மண்டபத்தில் வைகித் தன் கீழ்ப் பணிசெய்வோரை அவரவர்க்குரிய பணிகளிற் செலுத்தி ஆளுமாறுபோல, ஆன்மாவானது ஐம்பொறிகளை அவ்வவற்றிற்குரிய பொருள்களிற்செலுத்தி ஆட்சி செய்து, புருவ நடுவின்கண் நிற்கும். அரசனால் ஏவப்பட்டோர் ஏவிய தொழிலை மட்டுமேயன்றி அதனினூங்குச் செல்லமாட்டாமைபோல, ஐம்பொறிகளும் ஏனைப் பிற கருவிகளும் உயிரானது தம்மைச் செலுத்தத் தமக்குப் புலனாகும் பொருள்களையறிந்து நுகர்வதோடமைவதேயன்றி, அதனினூங்குச் சென்று தம்மை உடன் நின்று செலுத்தும் உயிரை அறியமாட்டா.

ஆயினும், ஒரு தொழில் செய்தற்கண் அரசனும் அமைச்சர் முதலாயினாரும் தம்முள் இன்றியமையாதவாறு போல, ஒரு பொருளை உணர்ந்து நுகர்தற்கண், உயிரும் பொறிகளும் தம்முள் இன்றியமையாதனவாகும். ஆதலால், உயிரானது தாமரை இலையின் நீர்போற் பற்றற்று நிற்பப் புத்தி தத்துவமே ஐம்பொறி வழியாகப் பொருள்களையுணரும் என்றல் அமையாது. புத்திதத்துவமும் ஒருவகைக் கருவியே யாகலானும், கருவிகளின் தொழிற்பாடு ஆன்மாவின் அறிவிச்சை தொழில்களுக்கு ஏற்பவே நிகழுமாதலானும், பொருள்களைப்

பொறிகளுக்கு அறிவித்துத் தானும் உடனாய் நின்று அறிவது உயிரே என உணர்க.

ஐம்பொறியை ஆண்டு, அங்கு அரசாய் உளம்நிற்ப,
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்: ஐம்பொறியிற்
காணாதேற், காணாது காணும் உளம்; காணாதேல்
காணாகண்; கேளா செவி!

(2) **ஈசுவர அவிகார வாதிகள் :**

இனி, புத்தி தத்துவமும் ஐம்பொறி முதலிய கருவிகளும் அறிவில்லாத சடமாகலின், அவற்றிற்குப் பொருள்களை உணர்ந்து நுகர்தற்கண், உயிரின் துணை இன்றியமையாதது என்பதமையும்; ஆனால் உயிரானது அறிவுஉடைய சித்துப் பொருளாதலின், அதற்கு வினைப் பயன்களை நுகர்தற்கண் முதல்வனின் துணை வேண்டப்படுவது எற்றுக்கு? என ஈசுர அவிகாரவாதிகள் முதலியோர் வினவுவர்.

ஐம்பொறிகளுக்கு ஆன்மாவின் துணை இன்றியமையாதவாறு போலவே, உயிர்கட்கும் முதல்வனின் துணை இன்றியமையாது ஒருதலையாகவேண்டப்பெறும். ஐம்பொறிகள் சடமாதலான் 'ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியா' என்றது பொருந்தும்; உயிரானது அறிவுடைய சேதனமாகலின், விளக்கோடு கூடிய கண்போலப் பொறிகளோடு கூடிய துணையால் மட்டுமே, உடன் நின்று உணர்த்தும் முதல்வனை வேண்டாமல், பொருள்களைத் தாமே அறிந்து நுகரும் என்றல் கூடாதோ? எனின் - ஐம்பொறிகளும் ஆன்மாவும் முறையே அறிவின்மையும், அறிவுடைமையும் ஆகிய வேறுபாடு பற்றித் தம்முள் ஒவ்வாவாயினும், தம்மையும் தமது முதலையும் உணரமாட்டாமைக்கண், ஐம்பொறிகளும் ஆன்மாவும் ஒப்புமையுடையனவேயாம்.

இவ்வுண்மையினையே, "இவ்வான்மாத் தன்னாலே உணரும் இந்திரியங்களைப்போலத் தானும் தன்னை உணராது நிற்றலான்" என ஆசிரியர் விளக்குகின்றார். ஆதலால், வினைப் பயன்களை நுகர்தற்கண் ஆன்மாவுக்கு முதல்வனின் துணை இன்றியமையாதாதல் பெறப்படும். அற்றேல், உயிர்கட்கு முதல்வனின் துணை வேண்டப்படுமாயின், அம்முதல்வனுக்கும் வேறொரு முதல்வனின் துணை வேண்டப்படுமன்றோ? எனின், தமக்கொரு முதற்பொருளை யுடையனவற்றிற்கே அம் முதற் பொருளின் துணை வேண்டுவதன்றித் 'தம்முணர்வின்தமி' எனவும், 'தமது முதல்' எனவும் போற்றப்பெறும் இறைவனுக்கு அந்நியதி இல்லை என்றுணர்க.

(3) **ஆன்மாவும் இறைவனும்:**

அற்றேல் அஃதொக்கும்; 'ஐம்பொறிகள் ஆன்மாவால் உணர்தல்போல், ஆன்மாத் தனது முதலாலே உணரும்' என உரைப்பின் ஐம்பொறிகட்கு வரும் பயன் அவற்றினால் ஒற்றித் துணரும் உயிர்க்காதல்போல, உயிர்க்கு வரும் இன்ப துன்பப் பயனும் அதனோடு ஒற்றித்துக் காணும் முதல்வனுக்காதல் வேண்டுமன்றோ? எனச் சிலர் வினா நிகழ்த்துதல் கூடும். உயிரானது தம்மை உடன்நின்று செலுத்துதலால் ஐம்பொறிகள் தமக்கென ஒரு காரணமுமின்றி உயிரின் பொருட்டே பொருள்களை அறிந்து வருகின்றமையின், அவற்றின் பயன் ஐம்பொறிகளுக்கின்றி உயிரினையே சார்கின்றது.

ஆனால், முதல்வனோ உயிர்களுக்குக் காட்டாக நின்று, அவ்வுயிர்கள் செய்த வினைக்கீடாகப் பொருள்களை அறிவித்து நிற்பன். ஆதலால், உயிரின் இன்பத்துன்பப் பயன்கள் ஒருபோதும் இறைவனைஎய்த மாட்டாவாகும். 'யாவையும் சூனியம் சத்தெதிர்' என்றபடி, சத்தின் முன்னர் அசத்துச் சூனியமாய் முடியுமாதலின், உயிர்களுக்குப் பொருள்களைக் காட்டுந் துணையாக உடன் நிற்பினும், சத்தாகிய முதல்வனை அசத்தாகிய இன்பதுன்பப் பயன்கள் சார்வதில்லை எனத் தெளிக!

"மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகம் சேட்டித்தது
என்னும் மறையின் இயல்மறந்தாய்! சொன்ன சிவன்
கண்ணா, உளம்,வினையாற் கண்டறிந்து நிற்கும்
காண்!
எண்ணான்! சிவன் அசத்தை இன்று.

இவ்வெண்பாவின்கண், சிவன் என்னும் சொல், 'மன்னுசிவன்' என்புழிப் பேரின்பத்துக்குக் காரணன் என்னும் பொருட்டாய்த் தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப்பித்தற்குரிய இயைபுணர நின்றது; 'சொன்ன சிவன்' என்புழி முற்றுணர்வினன் என்னும் பொருட்டாய் உயிர்களுக்குக் காட்டுந் துணையாதற்குரிய இயைபுணர நின்றது; 'எண்ணான் சிவன்' என்புழித் தூய தன்மையன் என்னும் பொருட்டாய் அசத்தை எண்ணாமைக்குரிய இயைபுணர நின்றது.

எனவே, காந்தத்தின் முன்னிலையில் இரும்பு அசைந்து தொழிற்படுமாறுபோலச் சிவத்தின் முன்னர் உலகம் தொழிற்படும் என்றும்; சிவமானது பொருள்களைக் காட்டும் துணையாக நிற்ப, உயிர்கள் தமது வினைக்கீடாகப் பொருள்களை நுகர்ந்து இன்ப துன்பப் பயன்களை எய்தும் என்றும்; உயிர்களோடு உடன் விரவி நின்று அவற்றிற்குப் பொருள்களை உணர்த்தி நுகர்வித்து வருதல்பற்றிச் சத்தாகிய சிவத்தினை, அசத்தாகிய இன்ப துன்பப் பயன்கள் எய்துவன அல்ல என்றும்; கடைப்பிடித்துக் கொள்க.

(4) **உயிர்கள் சிவத்துடன் ஒன்றி நின்று உணரும்:**

அற்றேல், சிவம் உணர்த்துதலால் உயிர்கள் உணரும் என்றுரைப்பின், உயிர்கள் சிவத்தின்வேறாய் நின்று உணருமோ? ஒன்றாய் நின்று உணருமோ? எனின்,

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி; விளங்காது
வெய்யோனை ஆகாத மீன்போல, -மெய்யவனிற்
கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்
புலனைக்
கண்டு, உடனாய் மன்னுதலைக் காண்!

என ஆசிரியர் அதற்கு விடைகூறி விளக்கி இருத்தல் காணலாம். விண்மீன்கள் ஞாயிற்றின் வேறுமாகாது ஒன்றுமாகாது உடனாய் நின்று ஒளியுடையவாமாறுபோல, உயிர்களும் சிவத்தின் வேறாகவும் ஒன்றாகவும் நில்லாது, அவ்விரண்டற்கும் பொதுவாய் அடங்கிச் சிவத்தோடு உடனாய் நின்று, பொருள்களை உணர்ந்து நுகர்ந்து வரும் என்பது இப்பாடலின் பொருளாகும்.

### (5) சிவமும் சக்தியும்:

இனி, அங்ஙனம் உயிர்கள் சிவத்தோடு உடனாய் நின்று சிவமுணர்த்த உணர்ந்துவரும் என்ன், உயிர்கட்குப் பலவேறு வகைப்பட்ட உணர்வுகள் நிகழ்தல் எற்றுக்கு? சிவமே பலவேறு வகைப்பட்ட உணர்வுகள் உயிர்களின்பால் நிகழ்த்துமெனின், சிவம் 'நிர்விகாரி' என்னும் சுருதியோடு முரணி விகாரியாவனன்றோ? எனச் சிலர் தடை எழுப்புவர்

அருள்உண்டாம் ஈசற்கு, அதுசத்தி அன்றே!
அருளும் அவன் அன்றி இல்லை - அருளின்று
அவன்அன்றே இல்லை! அருட்கண்ணார் கண்ணுக்கு
இரவிபோல் நிற்கும்அரன் ஏய்ந்து!

உயிர்கட்குப் பசுத் தன்மைய நீக்கிச் சிவத்தன்மையை விளக்குதற்கண் உள்ளதாகிய இரக்கம், இறைவனுக்குத் தொன்மையே உள்ளது. அவ்விரக்கம் அல்லது அருளானது இறைவனின் வேறு பொருள் ஆகாமல், அவனிற் பிரிவிலதாம் இயல்பாய ஆற்றலேயாம். அருளும் சிவமும் குணமும் குணியுமாகலின், அருள் இன்றிச் சிவம் இல்லை; சிவம் இன்றி அருள் இல்லை. ஞாயிறு தன் ஒளியுடன் ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியமாய் இயைந்து நிற்குமாறுபோல, சிவம் அருளோடு தாதான்மியமாய் இயைந்து நிற்கும். ஆதலால், தன் வயமுடைத்தாகிய சிவ முதற்பொருள் விகாரமின்றி நின்ற தனது 'சக்தி சங்கற்பமாத்திரத்தால்' வினைக்கீடாக உயிர்களுக்குப் பொருள்களை உணர்த்தி நிற்கும் என்று தெளிந்து கொள்க.

''இறைவன்தன் சந்நிதிக்கண்,
உலகின்தன் சேட்டை என்னும்
மறைகளும் மறந்தாய்! மாயை
மருவிடான் சிவன்! அவன்கண்
உறைதராது அசேதனத்தால்!
உருவுடை உயிர்கட் கெல்லாம்,
நிறைபரன் சந்நிதிக்கண்
நீடுணர்வு உதிக்கும் அன்றே! (1)

''அருளது சத்தியாகும்
அரன்தனக்கு! அருளை இன்றித்
தெருள்சிவம் இல்லை! அந்தச்
சிவம் இன்றிச் சத்தி இல்லை!
மருளினை அருளால் வாட்டி
மன்னுயிர்க்கு அளிப்பன்! கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும்
இரவியைப் போல, ஈசன்! (2)

## ஆறாம் சூத்திரம்

உணர்உரு அசத்துஎனின்; உணராது இன்மையின்;
இருதிறன் அல்லது சிவசத்து ஆம் என
இரண்டு வகையின் இசைக்கும் மன்னுலகே!

மேலை ஐந்தாம் சூத்திரத்தில், ''ஐம்பொறிகள் ஆன்மாவால் அளந்தறிந்தும், ஐம்பொறிகள் ஆன்மாவை அறியாதவாறு போல, ஆன்மாக்கள் 'தம் உணர்வின் தமி' எனப்பெற்ற கடவுளின் அருளால் உலகப் பொருள்களை அளந்தறிந்தும், இங்ஙனம் தமக்கு உலகப்பொருள்களை அறிந்து அறிவித்து உதவிவரும் கடவுளையும், தம்மையும் அறிந்து கொள்ள வல்லன அல்ல'' என்பது உணர்த்தப்பெற்றது.

பெறவே கடவுளாகிய முதற்பொருள் எவ்வாற்றானுமே அறியப்படாத பொருளோ? என்று ஐயம் நிகழும். இந்த ஐயத்தினை நீக்குவதற்கு, சத்து அசத்து என்னும் பொருளியல்புகள் இரண்டினையும் வரையறைசெய்து கடவுளாகிய பதிப்பொருளுக்குச் சிறப்பியல்பு என்னும் இலக்கணம், இனி இந்த ஆறாம் சூத்திரத்தின்கண் கூறப்பெறுகின்றது.

### பலவகைக் கருத்துக்கள்

கடவுளாகிய முதற்பொருள், நம்மால் உணரக்கூடிய பொருளோ? அல்லது நம்மால் உணர இயலாத பொருளோ? என்பது பற்றிப் பலரும் பலவகைக் கருத்துக்கள் கூறுவர். (1) மாயாவாதிகள், கடவுள் நம் மனம் மொழிகளுக்கு எட்டாமல் அப்பாற்பட்டு, வாக்கு மனாதீதமாக நிற்பர் என்பர். (2) நையாயிகர் கடவுள் உணரப்பெறும் பொருளே, வாக்கு மனாதீதம் என்றல் பொருந்தாது என்பர். (3) பாதஞ்சலர், கடவுட் பொருள் பாவனைக்கு எட்டக்கூடிய கோசரப் பொருளே என்பர். (4) சமவாதசைவர், ஆன்மாக்களுக்குப் பசுத்துவம் நீங்கியவழி, ஆன்ம ஞானத்திற்குக் கடவுள் கோசரம் ஆவர் என்பர். (5) சிவாத்துவித சைவர், கடவுட் பொருள் ஆன்மாவிற்குப்பெத்த நிலையில் மட்டுமேயன்றி, முத்திநிலையினும் அறியப் பெறுதல் இல்லை என்பர். இவர்களெல்லாம் கூறுகின்ற பல்வேறு கருத்துக்களும், ஆராய்ந்து முடிவு செய்தற்கு உரியனவாக உள்ளன.

### (1) மாயாவாதிகள்

கடவுளாகிய முதற்பொருள், வாக்கு மனாதீதமாய், நம்மால் உணரப்பட இயலாத பொருள் என்று மாயாவாதிகள் கூறுவர். கடவுள் உணரப்படாத பொருள் என்றால் அவர் இருந்தும் அவரால் நமக்கு ஆவது ஒரு பயனும் இல்லை. அவரும் நம்பால் வந்துசேரமாட்டார்: நாமும் அவர்பால் சென்று சேர்தல் இயலாது.

அத்தகைய ஒரு கடவுட் பொருளை உண்டு என்றல், ஆகாயத்தாமரையும், ஆமை மயிர்க் கயிறு போன்ற ஒரு வகைப் போலிக் கூற்றே ஆகும்.

உணராத பொருள் சத்து என்னின்,
ஒருபயன் இல்லை; தானும்
புணராது, நாமும் சென்று
பொருந்துவ தின்றாம்; என்றும்
தணவாத கருமம் ஒன்றும்
தருவதும் இல்லை; வானத்து
இணரார்பூந் தொடையும், யாமைக்கு
எழும்மயிர்க் கயிறும் போலும்!
—சித்தியார்.

*(2) நையாயிகர்*

கடவுளாகிய முதற்பொருள், நம் மன மொழி மெய்களுக்கு அப்பாற்பட்டது (வாக்கு மனாதீதம்) என்றல் பொருந்தாது; அது நம்மால் உணரக்கூடிய பொருளே என்று நையாயிகர்கள் கூறுவர். நம்முடைய அறிவு சிற்றறிவும் சுட்டறிவும் ஆதலால், அதுகொண்டு அறியப்படும் பொருள்களெல்லாம் அசத்தாய், அழிவுபடும் தன்மையனவாகும். ஆதலின் அழிதல் இல்லாத சத்துப் பொருளாகிய கடவுள், நம்மால் அறிவினால் அறியப்படக் கூடிய பொருள் அன்று.

''அசத்தாம்! சுட்டி
உணர்பொருள் ஆன எல்லாம்!'' (1)

''உண்டுபோல் இன்றாம் பண்பின்
உலகினை அசத்தும் என்பர்!'' (2)

''அசத்தாம் மனத்தினால்
தேர்வது எல்லாம்'' (3)

*(3) பாதஞ்சலர்*

முதற்பொருள், நம்முடைய சிற்றறிவு சுட்டறிவுகளுக்கு எட்டாததாயினும், நம்முடைய பாவனைக்குக் கோசரம் ஆகும் என்று, பாதஞ்சலர்கள் கூறுவர். முதற்பொருள் பாவனைக்குக் கோசரமாகும் எனின், அப்பாவனை தான் நான்கு வகைப்படும். அவற்றுள் நீ கூறும் பாவனை, மனம் முதலியவற்றோடு கூடிநின்று பாவிக்கும் பாவனையோ? கூடாது நின்று பாவிக்கும் பாவனையோ? இந்த இரண்டு வகையும் இன்றிப் பாவிக்கும் பாவனையோ? இம் மூவகையும் அல்லாமல், பசித்தவன் உண்டதாகப் பாவிக்கும் பாவனைபோல, உணராத பொருளை உணர்ந்ததாக வைத்துப் பாவகம் செய்வதாகிய பாவனையோ என்று பற்பல ஐயங்கள் நிகழும்.

மனம் முதலியவற்றோடு கூடி நின்று பாவிக்கும் பாவகம் என்னின், அஃது அறிவினால் அறியப்பட்ட சுட்டேயாதலால், முதற்பொருள் அசத்தாய் முடியும். மனம் முதலியவற்றோடு கூடாமல் நின்று, பாவிக்கும்பாவனை என்னின், மனம் நீங்கிய வழி ஆன்மாவிற்கு அறிவு நிகழுமாறு இல்லை. மனத்தோடுகூடியும் கூடாமலும் நின்று பாவிக்கும் பாவகம் என்னின், அங்ஙனம் மனத்துடன் கூடியும் கூடாமலும் நின்று செய்யக்கூடிய பாவகம் என்பது எதுவும் இல்லை. இம் மூவகையும் அன்றிப் பசித்தவன் உண்டாதாகப் பாவிக்கும் பாவகம் போலச் செய்யும் பாவகம் என்னின், அது வெறும் பாவனை மாத்திரமே அன்றி, அதனால் ஒரு பயனும் இல்லை. இவ்வாற்றால் கடவுட் பொருள் பாவனைக்குக் கோசரமாகும் என்று கூறுதல் பொருந்தாது.

''பாவகமேல், தான் அசத்தாம்; பாவனாதீதம் எனில்,
பாவகமாம்: அன்று என்னில் பாழ் அதுவாம்;-பாவகத்தைப்
பாவித்தல் தான் என்னில் பாவகமாம்; தன்அருளாற்
பாவிப் பதுபரம்; இல் பாழ்''
—சிவஞானபோதம்.

பாவிப்ப தென்னிற் பாவம்;
பாவகம் கடக்கிற் பாவம்;
பாவிக்குமது நான் என்னில்;
பாவகம்; பாவம் கெட்டுப்
பாவிப்பது என்னில் பாவம்;
பாவனை இறந்து நின்று
பாவிக்கப் படுவ தாகும்
பரம்பரன் அருளி னாலே''
—சித்தியார்.

*(4) சமவாத சைவர்*

கடவுளாகிய முதற்பொருளைத், தம்மைப் பற்றியுள்ள பசுத்துவம் நீங்கியவழி, ஆன்மாக்கள் தம்முடைய அறிவினால் அறிதல் இயலும் என்று சமவாத சைவர்கள் கூறுவர். அறியும் பொருளும், அறியப்படும் பொருளும் வெவ்வேறானவை ஆதலால், ஆன்மா முதற் பொருளைத் தன்னுடைய அறிவினால் அறிவதற்கு, முதற்பொருள் ஆன்மாவின் வேறல்லன், மற்றும், முதற்பொருள் ஆன்மாவிற்குச் சமமாகல் இன்றித் தூல சூக்கும முறையில், அதன் அறிவிற்கு உள்ளுமாய்க் கலந்து நிற்றலின், முதற்பொருளை ஆன்மா அறிதல் இயலாது. அன்றியும், ஆன்ம அறிவு எதனையும் தானே தன்னியல்பில் அறிய வல்லது அன்றி, முதற்பொருளின் துணை கொண்டே எதனையும் அறியும் இயல்புடையது. ஆதலால், பசுத்துவம் நீங்கிய வழியும், ஆன்மாக்கள் தம்முடைய அறிவினால் தாமே முதற்பொருளை அறிதல் இயலாது.

அந்நியம் இலாமை யானும்,
அறிவினுள் நிற்றலானும்,
உன்னிய எல்லாம் உள்நின்று
உணர்த்துவன் ஆத லானும்,
என்னது யான் என்று ஓதும்
இருஞ்செருக்கு அறுத்த லானும்,
தன்அறிவு அதனாற் காணும்
தகைமையன் அல்லன் ஈசன்!

*(5) சிவாத்துவித சைவர்:*

இனி, முத்திநிலையில் முதற்பொருளாகிய சிவம் மட்டுமே உள்ளதாக, ஆன்மாவானது சிவத்

துடன் கலந்துவிடுவதனால், ஆன்மாக்கள் பெத்த நிலையில் மட்டும் அன்றி, முத்திநிலையிலும் சிவமாகிய முதற்பொருளை அறிதல் இல்லை என்று சிவாத்துவித சைவர்கள் கூறுவர். உடலும் உயிரும் ஒன்றிக் கலந்து நிற்பினும், உடல் உடலே, உயிர் உயிரே, உடல் உயிராகாது, உயிர் உடலாகாது. அதுபோல முத்திநிலையில் உயிர் சிவத்தோடு கலந்து ஒன்றி நிற்பினும், சிவம் சிவமே, உயிர் உயிரே, சிவத்தில் கலந்து ஒன்றிநிற்கும் உயிர் இல்லாமல் அழிந்துபோவது இல்லை. அதனாலேயே ''ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆருயிர் ஈருருக்கொண்டு ஆனந்த வெள்ளத்திடைத் திளைத்தால் ஒக்கும்'' என்று, மணிவாசகர் திருக்கோவையாரில் அருளிச் செய்தபடி, ஆன்மாவானது முத்திநிலையில் சிவத்தினை உணர்ந்து, அதன் இன்பத்தை இனிது நுகர வல்லதாகின்றது. ஆதலின் முதற்பொருளை முத்திநிலையிலும் ஆன்மா அறிதல் இயலாது என்று, சிவாத்துவிதசைவர்கள் கூறுதல் பொருந்தாது.

''அதுவென்னும் ஒன்றன்று; அதுஎன்று வேறே
அதுஎன்று அறிஅறிவும் உண்டே;—அதுஎன்று
அறிய இரண்டல்லன்; ஆங்கறிவுள் நிற்றல்
அறியும் அறிவே சிவமும் ஆம்''

—சிவஞானபோதம்

''ஒன்றெனும் அதனால், ஒன்றென்று
உரைப்பதுண்டு; ஆகையாலே
நின்றனன் வேறாய்த் தன்னின்
நீங்கிடா நிலைமை யாலே,
பின்றிய உணர்வுக்கு எட்டாப்
பெருமையன்; அறிவின் உள்ளே
என்றும் நின்றிடுத லாலே
இவன்அவன் என்ன லாமே!''

— சிவஞானசித்தியார்

**சூத்திரப் பொருள்:**

இங்ஙனம் மாயாவாதிகள் - நையாயிகர்கள் - பாதஞ்சலர்கள் - சமவாத சைவர்கள்- சிவாத்துவிதசைவர்கள் ஆகிய பலரும் கூறும் கருத்துக்களை ஆராய்ந்து, கடவுளாகிய பதிப்பொருளுக்கு உரிய சிறப்பியல்பு எனும் இலக்கணம் இன்னதென்று, ஆறாம் சூத்திரத்தில் சிவஞானபோதம் தெளிவுற உணர்த்துகின்றது. அது வருமாறு:

''உணர்உரு அசத்துஎனின், உணராது இன்மையின்,
இருதிறன் அல்லது சிவசத்து ஆம் என,
இரண்டு வகையின் இசைக்கும் மன்உலகே

(1) இந்நூற்பாவுக்கு உரிய எழுவாயாக, மேலை ஐந்தாம் நூற்பாவில் வரும் 'தம் உணர்வின் தமி' என்னும் தொடரை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். 'தம் உணர்வின் தமி' எனினும், கடவுள்-முதற்பொருள்-பதிப்பொருள் சிவம் எனினும். ஒக்கும்.

(2) இந்நூற்பாவினை ''முதற்பொருள் ஆகிய இறைவன், உணர் உரு எனின், அசத்து; உணராது எனின் இன்மையின்; இருதிறனும் அல்லது சிவத்து ஆம் என, இரண்டு வகையினும் இசைக்கும் மன் உலகு'' என்று கொண்டு கூட்டி, விரித்துரைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

''பதியாகிய முதற்பொருள், அளவைகளால் அறியப்படும் இயல்புடையது என்றால், அங்ஙனம் அறியப்படும் உலகப்பொருள்கள் போல, அழிபொருள் ஆகிய அசத்து ஆகும். எவ்வாற்றானுமே அறியப்படாத இயல்பை உடையது என்றால், அங்ஙனம் அறியப்படாத முயற்கோடு, ஆமை மயிர்க்கம்பளம் என்பனபோலச் சூனியமாய் அசத்து எனப்படும். ஆதலான் உணரப்படுதல், உணரப்படாமை ஆகிய இந்த இரண்டு கூறுபாடும் அன்றி, பாசஞான பசுஞானங்களால் ஒருவாற்றான் அறியப்படாமையும்; பதிஞானம் என்னும் சிவஞானம் ஒன்றால் மட்டுமே அறியப்படுதலும் ஆகிய இந்தஇரண்டு வகையாலும், சிவமாகிய சத்தாய் (சித்துச்சத்தாய்) உள்ளது முதற்பொருள் என்று, மெய்யுணர்வின் நிலைபெற்று உயர்ந்தோர் கூறுவர்.''

**அருஞ்சொற்பொருள்:**

1. **உணர்உரு:** அறியப்படும் பொருள், அநுபவஞானத்திற் புலனாகும் பொருள்.

2. **உணரா(த)து:** அறியப்பட முடியாததாகிய பொருள்

3. **இன்மை:** சூனியம்; அசத்து, பாழ்

4. **இன்மையின்:** இல்லையாகிய சூனியம் (அசத்துப்பொருள்) ஆகிவிடுதலால்.

5. **சிவசத்து:** சிவமாகிய சத்து. சத்து-உட்பொருள். சிவசத்து எனினும், சித்துச்சத்து எனினும் ஒக்கும். சித்துப் பொருள்கள் மூன்று வகைப்படும். சித்துச்சத்து-பதி. சித்துச்சடசத்து -பசு. சடசத்து-பாசம். இவற்றுள் பசுவையும் பாசத்தையும் நீக்குதற்குப் பதிப் பொருளைச் சித்துச் சத்து என்னும் பொருளில் சிவசத்து என்றார். சித்து சத்து என்னும் இரண்டினுள், இறைமைத் தன்மைக்குரிய ஏனைய எல்லாக் குணங்களும் அடங்கும்.

6. **மன்னுலகு:** மெய்யுணர்வின் நிலை பெற்று உயர்ந்தோர்(மன்-நிலை பெற்ற. உலகு-உயர்ந்தோர்). 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது தொல்காப்பியம். இசைக்கும்-கூறுவர்; செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று.

**பதி பசு பாசம்:**

(1) இறைவனாகிய பதிப்பொருள், யாவற்றினும், யாவையினும் வேறாய் நிற்பினும், ஒன்றிக்கலந்து உடனாக இருந்து இயக்கி நிற்கும் அறிவுப் பொருள் ஆதலின் சித்தாயும்; என்றும் ஓர் இயல்பாய் நிலைபெற்று உள்ளது ஆதலின் சத்தாயும் விளங்குதலால், சித்துச் சத்து எனப்படும். சித்துச்சத்து எனினும், சிவசத்து எனினும் ஒக்கும். சித்து-அறிவுப்பொருள். சத்து-உள்பொருள்.

(2) பசுக்களாகிய ஆன்மாக்கள், பாசம் ஆகிய அசத்தோடு கூடி அசத்தாயும், பதியாகிய சத்தோடு கூடிச் சத்தாயும், சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மையதாதலின், சதசத்து எனப்படும். சத்து-நிலையாக உள்ள பொருள். அசத்து-நிலையில்லாத பொருள்.

(3) பாசம் என்னும் மலமாயை கன்மங்கள் அறிவில்லாத பொருள்களாய்ச் சடமாகிய அசித்தாயும், ஒரு தன்மைத்தாய் நில்லாமல் அவ்வப்போது தம் ஆற்றல்களில் மேற்பட்டும் அடங்கியும் மாறிவரும் நிலையில்லாத பொருள்களாய் அசித்தாயும் இருத்தலால், 'அசித்து அசத்து' எனப்படும். அசித்து-அறிவில் பொருள். அசத்து-நிலையில் பொருள்.

முடிவுரை:

இந்தச் சிவஞானபோதத்து ஆறாம் சூத்திரத்தின் பொருளை, முழுவதும் அடியொற்றி விளக்குவதாக அமைந்துள்ள பின்வரும் சிவஞானசித்தியார் செய்யுள், அன்பர்கள் அனைவரும் அறிந்து மகிழத்தக்கதாகும்.

''அறிவுறும் பொருளோ? ஈசன்
அறிவுறா தவனோ? என்னின்,
அறிபொருள் அசித்து அசத்துஆம்;
அறியாதது இன்றாம்; எங்கும்
செறிசிவம் இரண்டும் இன்றிச்
சித்தொடு சத்தாய் நிற்கும்;
நெறிதரும் சித்தின் முன்னர்,
அசத்தெலாம் நின்றி டாவே''

—சித்தியார், 240

(சிவஞானபோதம், பொதுஅதிகாரம் முற்றுப் பெற்றது).

**—தொடரும்**

---

# ஆலயங்களின் அமைப்பு

ஆலயங்களின் அமைப்பு, சரீரப் பிரஸ்தாரம் என்றும், இருதயப்பிரஸ்தாரம் என்றும் இருவகைப் படும். சரீரப் பிரஸ்தாரம் என்பது மனித உடலின் உறுப்புக்களைப் போன்ற பகுப்புக்களுடன் கூடியது. சிவாலயங்களில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், தம்ப மண்டபம், நிருத்த மண்டபம் என ஆறு மண்டபங்கள், பெரும்பாலும் அமைந்திருக்கும். அவைகள் மனித உடலின் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இவைகள் முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் குறிக்கும்.

மற்றொரு வகையில் நோக்கினால், கர்ப்பக் கிருகம் தலையும், அர்த்தமண்டபம் கழுத்தும், மகா மண்டபம் மார்பும் போல விளங்குகின்றன. யாகசாலை நாபியாகவும், கோபுரம் பாதமாகவும் திகழ்கின்றன. உடம்பிலுள்ள வாய் நாக்கு அண்ணாக்கு ஐம்பொறிகள் இருதயம் உயிர் என்பனவற்றைப்போல, சிவாலய அமைப்பிலும் பல பகுதிகள் உள்ளன. சிவாலயம் உடல், கோபுரம் வாய், நந்தி நாக்கு, கொடிமரம் அண்ணாக்கு, விளக்குகள் ஐம்பொறிகள். கர்ப்பக் கிருகம் இருதயம். சிவலிங்கம் உயிர். மனித உடல் தோல் இரத்தம் இறைச்சி எலும்பு மச்சை மேதை சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களால் இயன்றுள்ளது; அதுபோலவே, சிவாலயங்களும் செங்கல், வெண்கல், கருங்கல், சுண்ணாம்பு, மணல், நீர், காரம் என்னும் எழுவகைப் பொருள்களால் அமைக்கப்படுகின்றன.

இனி, இருதயப் பிரஸ்தாரம் என்பது, சிவபிரானைப் புறத்தே பூசிப்பது போல, அகத்தே பூசிப்பதற்கு, முப்பத்தாறு தத்துவங்களின் வடிவமான இருதய கமல அமைப்பைக் கற்பிப்பது. ஆத்ம தத்துவம் இருபத்து நான்கும், தாமரையின் நாளம். வித்தியா தத்துவம் ஏழுடன், சுத்தவித்தையும் ஆகிய ஒன்று சேர்ந்த எட்டும், தாமரை மலரின் எட்டு இதழ்கள். ஈசுவரம் சதாசிவம் என்பவை. கேசரங்கள், சத்தி தத்துவம், தாமரையின் பொகுட்டு, சிவதத்துவம், அப்பொகுட்டினுள் காணப்படும் பீஜ வடிவங்கள் ஆகும். இங்ஙனம் இருதயத்தில் தாமரை வடிவமாய்த் தியானம் செய்து இறைவனை வழிபடும் முறை, இருதயப் பிரஸ்தாரம் எனப்படும்.

''மண்முதல் நாளம்; மலர் வித்தை கலாரூபம்;
எண்ணிய ஈசர் சதாசிவமாம்;— நண்ணில்
கலைஉருவாம்; நாதமாம் சத்தி அருன்சண்ணாம்;
நிலை அதிலாம் அச்சிவன்தாள் நேர்''

எனவரும் சிவஞானபோத வெண்பாவினால் இதன் இயல்பினை, ஆசிரியர் மெய்கண்ட தேவர் அழகுற விளக்கியருளியிருப்பதனால் யாவரும் இனிது உணர்ந்து கொள்ளலாம்.

—ஆசிரியர்.

# அடியார் பெருமை

"கலைமாமணி"
கவிஞர் திரு. மனசை ப. கீரன், பி.ஏ., பி.டி.,
வானொலி நிலையம், சென்னை.

உலகில் கல்வி செல்வம் புகழ் பதவி முதலியவற்றால் பெருமை பெற்றோர்கள் பலர் இருப்பினும், அவர்கள் எல்லோரையும்விடப் பெருமைம்மிக்கவர் அடியவரே யாவர். எல்லோருடைய பெருமையினையும்விட மிக மேலானது, அடியார் பெருமையேயாகும். கடவுள் எல்லாப் பெருமையும் உடையவரே ஆயினும், அவரையும்விட மிக்க பெருமையுடையவர்கள் அடியவரேயாவர். அடியார்களின் பெருமைக்கு நிகரான பெருமை வேறு எதுவும் இல்லை.

அடியார்களின் பெருமை எத்தகையது என்பதனை, எளிய குழந்தைகளும் எண்ணி உணரும்படி, ஔவைப் பிராட்டியார் அழகுற அருளிச் செய்திருக்கின்றார். "எல்லாவற்றிலும் மிகமிகப் பெரியது இவ்வுலகம்". இவ்வுலகமோ நான்கு முகங்களையுடைய பிரமதேவனின் படைப்பு. பிரமதேவனோ திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றியவன். அத்திரு மால் திருப்பாற் கடலில் பள்ளி கொள்பவர். அக்கடலோ அகத்திய முனிவரின் உள்ளங்கையில் அடங்கியது. அவ் அகத்தியரோ கும்பம் அல்லது குடமாகிய கலசத்தில் பிறந்தவர். கலசமோ உலகின் ஒரு சிறு கூறாகிய மண்ணிலிருந்து தோன்றியது. அவ்வுலகமோ, ஆதிசேடனாகிய அரவின் ஆயிரம் தலைகளுள் ஒரு தலையால் சுமக்கப் படுவது. ஆதிசேடனோ, உமாதேவியார் தம் சிறு விரலில் அணியும் மோதிரம். அவ் உமா தேவியோ, சிவபெருமானின் ஒரு பாகத்தில் ஒடுங்கியிருப்பவள். அந்தச் சிவபெருமானும் தொண்டர்கள் ஆகிய அடியார்களின் உள்ளத்தில் ஒடுங்கியிருப்பவர். இவ்வாறு எல்லோரினும் பெரியோராகிய கடவுளையே தம் உள்ளத்தில் எழுந்தருளி ஒடுங்கியிருக்குமாறு செய்யும் அடியார்களின் பெருமை, நம்மால் சொல்லி அளவிட முடியாததாகும்.

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர்தம் பாகத்தொடுக்கம்
இறைவனோ தொண்டர்தம் உள்ளத்து
ஒடுக்கம்!
தொண்டர்தம் பெருமை சொல்லவும்
பெரிதே"

எனவரும் ஔவைப் பிராட்டியாரின் பாடல், அடியார்களின் அளப்பரிய பெருமையினை மிகவும் அழகுறச் செவ்விதின் விளக்கியிருத்தல் காணலாம்.

இறைவனுடைய திருவடியையே தமக்குரிய புகலிடமாகவும் அடைக்கலமாகவும் சிக்கெனப் பற்றிக்கொண்டு, அடைந்திருப்பவர்கள் யாரோ அவர்களுக்கே அடியார்கள் என்று பெயர். "அடி ஆர்பவரே அடியவர் ஆமால்" என்பது திருமூலர் திருமந்திரம். தொண்டர் சான்றோர் பக்தர் சங்கமர் நீத்தார் சரணர் என்னும் பல சொற்களும் அடியார்களையே குறிக்கும். இறைவனுக்கும் அவனால் படைக்கப்பெற்ற அடியார்களுக்கும் பலவகையான இனிய தொண்டுகளைச் செய்பவர்கள் தொண்டர்; சால்பு என்னும் பலவகையான சிறந்த குணங்களால், நிறைந்தவர்கள் சான்றோர்; இறைவனிடத்தில் எல்லையில்லாத் அன்பாகிய பக்தியினை உடையவர்கள் பக்தர்; இறைவனைத் தம் உள்ளமாகிய கோயிலில் எழுந்தருள்வித்து, அவன் அருளை உலகம் எங்கணும் இயங்கிப் பரவச் செய்து வருபவர்கள் சங்கமர்; இறைவன் அருளைப் பெறுவதற்காக உலகப் பற்றுக்களையெல்லாம் நீத்து ஒழித்தவர்கள் நீத்தார்; இறைவனின் திருவடியாகிய சரணத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு அவனது, அருளின் பெருமையைப் பல இடங்களிலும் சென்று சரித்துப் பரப்பி வருபவர்கள் சரணர் எனப்படுவர். இச் சொற்களினால் அடியார்களின் பலவகை இயல்புகளும், செயல்களும் விளக்கப்பெறுதல் காணலாம்.

திருவள்ளுவர் தமது ஒப்புயர்வற்ற திருக்குறளில் அடியார்களின் பெருமையினை 'நீத்தார் பெருமை' என்று குறிப்பிட்டு விளக்கியிருக்கின்றார். அடியார்களைத் திருவள்ளுவர் ஒழுக்கத்து நீத்தார், இருமைவகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார், 'செயற்கரியசெய்வார், நிறைமொழி மாந்தர்' குணமென்னும் குன்

றேறி நின்றார், அந்தணர் அறவோர்' எனப் பலவகைகளால் குறிப்பிட்டு அருளிச் செய்கின்றார். உலகப் பற்றுக்களையெல்லாம் துறந்த அடியார்களின் பெருமையினை அளவிட்டுக் கூறுதல் இயலாது என்பதனை,

''துறந்தார் பெருமை
துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்
கொண்டற்று''

எனத் திருவள்ளுவர் கூறியிருத்தல் காணலாம். இவ்வுலகத்தில் இதுகாறும் பிறந்து இறந்தவர்களை எங்ஙனம் எண்ணிக் கூறுதல் இயலாதோ அங்ஙனமே, அடியார்களின் பெருமையினை அளவிட்டுக் கூறுதல் இயலாது என்பது கருத்து.

இக்கருத்தினையே வேறொரு வகையில் உமாபதி சிவம் என்னும் சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ''கருங்கடலைக் கையால் நீந்திக் கடப்பது எளிது; கடற்கரையின் நொய் மணலை எண்ணி அளவிட்டாலும் அளவிடலாம். கடலில் அடுத்தடுத்து மாறி மாறி எழுந்து தோன்றும் அலைகளையும் ஒன்று இரண்டு என்று எண்ணிக் கூட்டிச் சொல்லிவிடலாம். கடலிலுள்ள மீன்களையும், அளவிட்டு விடலாம். ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களையும் அளவிட்டு விடலாம். ஆனால் அடியார்களின் பெருமையினை அளவிட்டுக் கூறுதல் ஒரு சிறிதும் இயலாது. அடியார்களின் பெருமையைச் சேக்கிழார் பெருமான் ஒருவர் கூறமுடியுமே ஒழிய, தேவர்களாலும் அதனைக் கூறுதல் இயலாது'' என்னும் கருத்தினைப் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

''கருங்கடலைக் கைநீத்துக்
கொளல்எளிது; முந்நீர்க்
கடற்கரையில் நொய்ம் மணலை
எண்ணிஅள விடலாம்;
பெருங்கடல்மேல் வருந்திரையை
ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடைஇலக்கம்
பிரித்துவிட லாகும்;

கருங்கடலில் மீனைஅள
விடலாகும்; வானத்
தாரகையை அளவிடலாம்;
சங்கரன்தாள் தமது
சிரங்கொள் திருத் தொண்டர்புரா
ணத்தைஅள விட, நம்
சேக்கிழார்க் கெளிதலது
தேவர்க்கும் அரிதே''

எனவரும் சேக்கிழார் புராணப் பாடலால், அடியார்களின் பெருமை எத்தகையது என்பதனை யாவரும் எண்ணி உணரலாம்.

இத்தகைய அடியார்களின் பெருமையினை திருவாரூர்த் தியாகேசப் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பின்வருமாறு கூறி உணர்த்துகின்றார்.

''பெருமையால் தம்மை ஒப்பார்;
பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்;
ஊனமேல் ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்;
அன்பினால் இன்பம் ஆர்வார்;
இருமையும் படந்து நின்றார்;
இவரைநீ அடைவாய் என்றார்''

என்பது பெரியபுராணம். இங்ஙனம் சிவபெருமான், அடியார்களின் அளப்பரிய பெருமையினை விளக்கியருளிய பின்பே, சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஞாலம் உய்ய, நாம் உய்ய, நம் சைவ நன்னெறியின் சீலம் உய்ய, மூலமான திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளிச் செய்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் ஆகிய மூன்றிலும், அடியார்களின் பெருமையினை விரிவாக அறிந்து கொள்ளலாம்.

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் தலைசிறந்ததாகிய, சிவஞான போதத்தில் பன்னிரண்டாம் சூத்திரத்திலும், அடியார்களின் பெருமை விளக்கப்பட்டுள்ளது.

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே

என்னும் சிவஞான போதத்தின் சூத்திரம், நாம் அடியார்களாகிய அன்பர்களுடன் மருவிச் சேர்ந்து பழகுதல் வேண்டும் எனவும், அடியார்களை ஆண்டவன் எனவே மதித்து வணங்கிப் பணிதல் வேண்டும் எனவும், கூறியிருத்தல் காணலாம்.

இவ்வாறே சிவஞான சித்தியார் எனும் நூலும், ஆண்டவனுக்குச் செய்யும் பக்தியை விட அடியார்களுக்குச் செய்யும் பக்தியே மேலானது என்றும், அடியவர்களிடம் அன்பு இல்லாவிட்டால் ஆண்டவனிடத்து அன்பு செலுத்தியும் பயனில்லை என்றும், அடியார்கள் இடைவிடாது எப்பொழுதும் இறைவனை நினைத்துச் சிவோகம்பாவனை செய்வதனால் சிவனேயாவார்கள் என்றும் கூறுகின்றது. 'அடியவர்க்கு அன்பில்லார் ஈசனுக்கு அன்பில்லார்' 'திருவேடம் சிவனுருவேயாகும்' 'சிவோகம் பாவிக்கும் அத்தால் சிவனுமாவர்' எனவரும் சிவஞானசித்தியார் செய்யுட்கள் அடியார்களின் பெருமையினைச் சிறப்புற விளக்குகின்றன.

சேக்கிழார்பெருமான், பெரியபுராணத்தில் திருக்கூட்டச்சிறப்பு என்னும் பகுதியில், அடியார்களின் பெருமையினைப் பின்வருமாறு விளக்குகின்றார். அடியவர்கள் இறைவன்பால் எல்லையில்லாத அன்புடையவர்கள். இறை

வனைச் சிறிதும் மறவாமல் சிந்தையில் நினைந்துருகுபவர்கள். தம் உள்ளம் உரை உடல் என்னும் முக்கரணங்களாலும் இறைவனுக்குத் தொண்டு புரிபவர்கள். ஒழுக்க நலத்தாலும், தவநலத்தாலும், அவர்களின் உடல் மாசிலாத மணிதிகழ் மேனியாக விளங்கும். அதன்மேல் பூசுகின்ற திருநீறு போல, அவர்களின் உள்ளமும் தூய்மையுற்றுப் புனிதமாகத் திகழும். ஐம்பெரும் பூதங்களும் கலங்கி நிலைமாறினாலும், அவர்கள் இறைவனை மறக்கமாட்டார்கள். எவ்வளவு சோதனைகள் நேரினும் தம் அன்பில் உறுதியுடையவர்களாக இருப்பார்கள். குற்றமற்ற குணமலையாக விளங்குவார்கள். ஓடும் செம்பொனும், ஒக்கவே நோக்கும் இயல்புடைய அவர்களுக்குக் கேடும் ஆக்கமும் சிறிதும் இல்லை. இறைவனைக் கும்பிடுதல் ஒன்றே அவர்களின் குறிக்கோளும் இன்பமுமாகும். ஆதலால் மோட்சமாகிய வீடுபேற்றையும் அவர்கள் ஒரு பொருளாக விரும்பமாட்டார்கள் உருத்திராக்கக் கண்டிகையே அவர்கள் அணியும் மாலையாகும். கந்தையே அவர்கள் உடுக்கும் ஆடையாகும். இறைவனின் தொண்டைத் தவிர வேறு எதிலும் அவர்கள் ஈடுபடமாட்டார்கள். அவர்கள் ஈர அன்பினர். யாதும் குறைவிலார். அவர்களின் வீரமும் பெருமையும் விளக்குதல் அரிது.

இத்தகைய அடியார்களின் பெருமையை உணர்ந்தே, எல்லாச் சமயங்களிலும் அடியார்களின் பெருமையும் சிறப்பும் வழிபாடும் வற்புறுத்தப்படுகின்றன. கடவுள் இயல்பு பற்றிய கருத்து வேறுபாடுகள் பலவகைச் சமயங்களிலும் உண்டு எனினும், அடியார்களின் பெருமையினை எல்லாச் சமயங்களும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளுகின்றன. மாணிக்கவாசகர் தாம் அடியார்களின் நடுவில் இருக்கும்படி தமக்கு இறைவன் அருள்செய்தல் வேண்டும் என வேண்டிக் கொள்ளுகின்றார். பல பசுக்கள் கூடியுள்ள ஒரு பெரிய மந்தையில், ஒரு குருட்டுப் பசு இருப்பின், அது மற்ற பசுக்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு புல்வேளிக்குச் சென்று புல்மேய்ந்து திரும்பிவரும். அதுபோல அடியார்களின் நடுவில் இருந்தால் அவர்கள் எய்தும் நலங்களை நாமும் அடைந்துவிடலாம். அதனாலேயே அடியார்களின் நடுவேயிருக்கும்படி தமக்கு அருள்புரியுமாறு மாணிக்கவாசகர் இறைவனை வேண்டுகின்றார்.

''உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரிவாய் பொன்னம்பலத்துஎம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்டே''

என்பது திருவாசகம். இதனால் அடியார்களின் கூட்டுறவினால் ஏற்படும் நன்மையினை நாம் நன்குணரலாம். எனவே, அடியார்களின் அளவில்லாத பெருமையை உணர்ந்து, அவர்களுடன் கூடிப் பழகி அன்பு பாராட்டி, நாம் இன்புற்று வாழ முயலுவோமாக!

---

## திருவாலியைச் சூழ்ந்துள்ள திவ்வியதேசத்து எம்பெருமான்கள்

சீர்காழி வட்டம் திருவாலித் திருநகரி அருள்மிகு கல்யாண ரங்கநாத சுவாமி திருக்கோயிலின் கருடசேவை விழாவின் பொழுது, திருமங்கையாழ்வார் எழுந்தருளும் திவ்விய தேசங்களும், அவ்வத் திவ்விய தேசத்தின் பெருமாள் திருப்பெயர்களும் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | குறையலூர் — | உக்கிர நரசிம்மர் |
| 2. | மங்கைமடம் — | வீர நரசிம்மர் |
| 3. | காவளம்பாடி — | கண்ணபிரான் |
| 4. | திருமணிக்கூடம் — | வரதராசப் பெருமாள் |
| 5. | பார்த்தன்பள்ளி — | பார்த்தசாரதிப் பெருமாள் |
| 6. | மஞ்சள்குளி மண்டபம் } — | நாராயணப் பெருமாள் |
| 7. | மணிமாடக் கோயில் } | |
| 8. | வண்புருடோத்தம் — | புருடோத்தமர் |
| 9. | வைகுந்த விண்ணகரம் — | வைகுந்தநாதர் |
| 10. | செம்பொன்செய்கோயில் — | செம்பொன் அரங்கர் |
| 11. | திருத்தெற்றி அம்பலம் — | பள்ளிகொண்ட பெருமாள் |
| 12. | அரிமேய விண்ணகரம் — | குடமாடு கூத்தர் |
| 13. | திருவெள்ளக் குளம் — | அண்ணன் பெருமாள் |
| 14. | திருத்தேவனார் தொகை — | மாதவப் பெருமாள் |
| 15. | திருவாலி — | இலட்சுமி நரசிம்மர் |

# திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு

**முன்னுரை :**

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்த அரும்பெரும் தெய்வத் தமிழ் நூல்களே, திவ்வியப் பிரபந்தங்கள் எனப் போற்றப்பெற்று வருகின்றன. திவ்வியம் என்பது தெய்வத்தன்மை. மிகவும் சிறந்த தலங்களைத் திவ்வியதேசம் என்றும், மிகவும் சிறந்தவர்களாகிய நித்திய சூரிகளைத் திவ்வியசூரிகள் என்றும் வழங்குதல் காணலாம். அம்முறையில் மிகவும் சிறந்த 'தெய்வத்தன்மை வாய்ந்த நூல்கள்' 'தெய்வத் திருவருளை விளக்கும் நூல்கள்' என்னும் கருத்தில் ஆழ்வார்களின் அருளிச் செயல்களைத் திவ்வியப் பிரபந்தங்கள் என வழங்குகின்றோம்.

உலகத்தில், குறிப்பாகத் தமிழ் மொழியில் பிரபந்தங்கள் எனப் பொதுவாக வழங்கப் பெறும் நூல்கள் பல உண்டு. அவற்றைத் தமிழ் இலக்கண நூலார் 96 வகைகளாகப் பிரித்துக் கூறுவர். அவைகள் பெரும்பாலும் உலகியற் பொருள்களையே பற்றிக் கூறும் சாதாரணப் புனுவல்கள். இவைகளோ உயர்வற உயர்நலம் உடைய தெய்வத்தினைப் பற்றி விளக்குபவை. ஆதலின் பிற சாதாரண நூல்களினின்று பிரித்து இவைகளின் சிறப்பையுணர்த்தி விளக்கும் முறையில், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பெரியோர்கள் 'திவ்வியப்பிரபந்தங்கள்' என்னும் சிறந்த பெயரால் விசேடித்து வழங்கி வருகின்றார்கள். இவைகள் ஏறத்தாழ 4000 பாடல்களைக் கொண்டிருத்தலின், 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' எனவும் வழங்கும்.

**ஆழ்வார்கள் :**

பகவானுடைய சொரூப ரூப குண விபூதிகளை, ஆழ்வார்கள் பரபக்தி பரஞானம் பரமபக்தி என்பனவற்றால் நன்கு ஈடுபட்டு அநுபவித்து மகிழ்ந்தார்கள். பரபக்தியாவது இறைவனின் தொடர்பில் இன்பமும், பிரிவில் துன்பமும் அடையும்நிலை. பரஞானம் என்பது இறைவனைத் தெளிவாக நேரே கண்டு அநுபவித்து அறிதல். பரமபக்தியாவது இறைவனைநினைப்பளவிற் பிரிய நேர்ந்தாலும் தாங்க முடியாமல் உயிர் இழக்கும் எல்லையற்ற பேரன்பு. இத்தகைய பரபக்தி பரஞானம் பரமபக்திகளால் இறைவனின் "இயல்பு-திருமேனியழகு-உயரிய பண்பு நலங்கள் ஆகிய மேன்மைகளில் உள்ளம் துவக்குண்டு ஆழ்ங்காற்பட்டு ஆழ்ந்து திளைத்து அநுபவித்து மகிழ்ந்த பெருமக்களே ஆழ்வார்கள் எனச் சிறப்பித்துப் புகழப் பெறுவர். தாம் பெற்றுத் திளைத்த இறையருள் இன்ப அநுபவம், தம் உள்ளத்தின் உள்ளே அடங்காமல், எல்லையின்றிப் பொங்கி வழிந்து புறப்பட்ட நிலையில், ஆழ்வார்கள் அருளிச் செய்த தமிழ் வேதங்களே, திவ்வியப்பிரபந்தங்கள் எனப் போற்றப் பெறுகின்றன.

வண்டுகள் மலர்களில் தேனையுண்டு பிரீதிக்குப் போக்குவிட்டு முரன்றதுவே இசையாய் விழுந்தாற் போல, ஆழ்வார்கள் ஆகிய வண்டுகள், பகவானின் திருவடிகள் ஆகிய மலர்களிலே பகவத் கிருபை அநுபவம் ஆகிய தேனை உண்டு மாந்தித் திளைத்து, அம் மகிழ்ச்சிக்குப் போக்குவீடாகத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தனவே திவ்வியப்பிரபந்தங்கள் என்னும் ஒப்புயர்வில்லாத நூல்கள் ஆகும்.

**திருமாலவன் கவி :**

பெரியோர்கள் நூல்களைப் பலவகைகளாகப் பாகுபாடு செய்வர். நூல்களிற் பெரும்பாலானவை சாரமில்லாதனவாக இருப்பது உண்டு. ஒருசில சிறிதளவே சாரமுடையனவாக இருக்கும். அவற்றுள்ளும் ஒருசிலவே மிகுந்த சாரம் உடையனவாகத் திகழும். அவைகளிலும் ஒருசில மட்டுமே, மிகவும் உயர்தரமான சாரம் நிரம்பிப் பெரும்பயன் கொடுப்பனவாய் விளங்கும். இவற்றை முறையே அஸாரம்-அல்பஸாரம்-ஸாரம் - அதிஸாரம் - ஸாரதமம் எனப் பெரியோர்கள் வழங்குவர். இவற்றில் 'ஸாரதமம்' என்னும்படி, உயர்தரமான சாரம் பெரிதும் நிரம்பி, மிகுந்த பயன்களை விளைவிக்கும் நூல்களின் வகையினைச் சேர்ந்தவை, திவ்வியப் பிரபந்தங்கள் என்பது, சான்றோர்கள் அனைவரும் ஆராய்ந்து ஒருமுகமாகக் கண்ட முடிபு.

வேறு பல நூல்களில், எடுத்த பொருளுக்குப் புறம்பான-சாதாரணப் பொருள்களும் கலந்து வரப்பெறும். உதாரணமாக, 'இராமாயண காவியம் செய்கின்றேன்' என்று கூறித் தொடங்கும் வால்மீகி முனிவர், கங்கையின் தோற்றம், காங்கேயன் ஆகிய முருகனின் தோற்றம், புஷ்பக விமான வருணனை முதலிய வேறுபல பொருள்களைப் பற்றியும் இடையிடையே இயம்பிச் சொல்கின்றார். 'நாராயணனுடைய கதையினை நவிலுகின்றேன்' என்று தொடங்கும் வியாசமுனிவர் பீஷ்மன் முதலாகப் பல

ருடைய பிறப்பு வளர்ப்புகளைப் பற்றியும், குருக்ஷேத்திர பூமியில் நிகழ்ந்த பயங்கரமான கொடிய பாரத யுத்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் கூறிக்கொண்டு போகின்றார். இங்ஙனமெல்லாம் இல்லாமல் ''திருமாலவன் கவி'' என்ற வாயோலைப்படியே, முற்றிலும் நூற்றுக்கு நூறு பகவானுடைய திருவருட் செய்திகளையே கூறிச் செல்லுகின்றன திவ்வியப்பிரபந்தங்கள். இதனை,

''இராமாயணம்-நாராயணகதை என்று தொடங்கி
கங்கா காங்கேய சம்பவாதி அசத் கீர்த்தனம்
பண்ணின எச்சில்வாய் சுத்தி பண்ணாமல்,
திருமாலவன்கவி என்ற வாயோலைப்பாடியே,
மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு உரிய
சொல் வாய்ந்த இது, வேதாதிகளில்
பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள்
போல அருளிச் செயலில் சாரம்''

எனவரும் 'ஆசாரிய இருதயம்' முதலிய நூல்களின் சூக்திகள் கொண்டு தெளிவுற அறியலாம்

திவ்வியப் பிரபந்தங்கள் வேதங்களுக்குச் சமமான சிறப்புடையவையாகும். நம்மாழ்வார் அருளிச் செய்த,

திருவிருத்தம் —இருக்குவேதம்
திருவாசிரியம் —எசுர்வேதம்
பெரிய திருவந்தாதி —அதர்வணவேதம்
திருவாய்மொழி —சாமவேதம்

என்று பெரியோர்கள் போற்றியுள்ளனர், இதனை,

''இயற்பா மூன்றும் வேதத்ரயம் போல;
பண்ணார் பாடல் (திருவாய்மொழி) இசை கொள்
வேதம் (சாமம்) போலே''

என அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அழகுற அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்.

**மாறன் மறைக்கு ஆறங்கம் :**

வேதங்கள் நான்கிற்கும், சார்பாக அங்கங்கள் உண்டு. அவைகள் ஆறு எனக் கூறப்படும். நம்மாழ்வார் பாடிய தமிழ் வேதங்கள் நான்கிற்கும், சார்பாக ஆறு அங்கங்கள் உண்டு. அவைகள் திருமங்கையாழ்வாரால் அருளிச் செய்யப்பெற்றுள்ளன.

பெரிய திருமொழி
திருக்குறுந் தாண்டகம்
திருநெடுந் தாண்டகம்
திருவெழுகூற்றிருக்கை
சிறிய திருமடல்
பெரிய திருமடல்

எனத் திருமங்கையாழ்வார் அருளிய ஆறு பிரபந்தங்களும், வேதங்களுக்குரிய சிட்சை வியாகரணம் நிருக்தம் சந்தஸ் கல்பம் சோதிடம் என்பன போல, நம்மாழ்வார் தமிழில் அருளிய நான்கு வேதங்களுக்கும் உரிய ஆறு அங்கங்கள் ஆகும்.

'மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்
ஆறங்கம்கூற அவதரித்தான்''

எனவரும் உபதேச ரத்தினமாலைச்செய்யுளும், இங்கு நாம் உணரத் தக்கது.

**எண்மர் நன்மாலைகள் :**

வேதங்களுக்கு உபவேதங்கள் என்றும், உபாங்கங்கள் என்றும் சில உண்டு. புராணம் நியாயம் மீமாம்ஸை ஸ்மிருதி என்பன உபாங்கங்கள். ஆயுள்வேதம் வில்வேதம் காந்தருவ வேதம், அர்த்த சாஸ்திரம் என்பன உபவேதங்கள். இவைகளை யெல்லாம் சேர்த்து ''அஷ்டாதச (18)வித்தைகள்'' என்று அறிஞர்கள் வழங்குவர். இம்முறையில் நம்மாழ்வார் அருளிய தமிழ் வேதங்களுக்கும், உபவேதங்களும் உபாங்கங்களும் உண்டு.

''வேத சதுஷ்டய அங்க உபாங்கங்கள் பதினாலும்போல, இந்நூலுக்கு இருந்தமிழ்நூற் புலவர் (திருமங்கைமன்னர்) பனுவல் ஆறும், மற்றை எண்மர் நன்மாலைகளும்''

என்று, இக்கருத்தினை 'ஆசார்ய ஹ்ருதயம்' அமைவுற விளக்கியிருத்தல் காணலாம். இதன் படி ஏனைய 8 ஆழ்வார்களும் அருளிச் செய்த நூல்கள், உப வேதங்களும் உபாங்கங்களும் ஆகும். அவைகள் வருமாறு :-

1. பொய்கையார்—முதல் திருவந்தாதி
2. பூதத்தார்—இரண்டாம் திருவந்தாதி
3. பேயார்—மூன்றாம் திருவந்தாதி
4. திருமழிசையார்—நான்காம் திருவந்தாதி
5. குலசேகரர்—பெருமாள் திருமொழி
6. பெரியாழ்வார்—பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு
7. தொண்டரடிப்பொடி—திருமாலை, திருப்பள்ளிஎழுச்சி
8. திருப்பாணாழ்வார்—அமலனாதிபிரான்

**உபப்பிரும்மணங்கள் :**

வேதங்களுக்கு 'உபப்ரும்ஹணம்' எனச் சில நூல்கள் உண்டு. உபப்ரும்ஹணம் என்பது வேதப் பொருளையே விவரித்துக் கூறும் நூல். அம்முறையில் பின்வரும் அருளிச் செயல்களைக் கொள்ளலாம்.

1. மதுரகவிகள்—கண்ணிநுண் சிறுத்தாம்பு.
2. ஆண்டாள்—திருப்பாவை, நாச்சியார் திருமொழி.
3. திருவரங்கத்து அமுதனார்—இராமாநுச நூற்றந்தாதி.

மதுர கவிகள் பாடியருளிய 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்பது நம்மாழ்வார்மேற் பாடப் பெற்றது. ஆசார்ய பக்தியின் அருமைப்பாட்டினை விளக்கியருள்வது. ஆண்டாள் பாடியருளிய பிரபந்தங்களோ ''வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்'' எனப் புகழ்ந்து பாராட்டப்பெற்றவை. திருவரங்கத்தமுதனார் இயற்றியருளிய இராமாநுச நூற்றந்தாதியோ ''பிரபந்ந காயத்திரி'' எனச் சிறந்தெடுத்து வழங்கப்பெற்று வருவது. இவ்வாற்றால் திவ்வியப் பிரபந்தங்கள் ஆகிய ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் வேதங்களொடு ஒத்த சிறப்பும் பெருமையும் உடையவாதல் காணலாம்.

**வேதங்களினும் மேம்பட்டவை :**

இனி ஒருவகையில் இவைகளை, வேதங்களைக் காட்டிலும் கூடப் பெரியோர்கள் விசேடித்துக் கூறியிருக்கின்றார்கள். வேதங்கள் உரைகாரர்கள் பலரும் கலக்கியது: திவ்வியப் பிரபந்தங்கள் 'நன் ஞானத்துறை படிந்து' என்றபடி தெளிவும் தூய்மையும் மிக்கவை. தக்கார் ஒருசிலரே ஓதத் தக்கனவாதலின் வேதங்கள் மட்குடம் போன்றவை; அனைவருமே ஓதிப் பயன்பெறக்கூடியவையாகலின் திவ்வியப் பிரபந்தங்கள் பொற்குடம்போன்றவை. உப்புத் தன்மை மிக்குக் குடிக்க இயலாத கடல்நீர் போன்றவை வேதங்கள்; திவ்வியப்பிரபந்தங்களோ யாவரும் பருகுதற்கு எளிய இனிய சிறந்த சாய்கரக நீர் போன்றவை. மேலும் வேத வேதாந்தங்களின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடியாத பொருள் நலங்களையும், நாம் திவ்வியப்பிரபந்தங்களின் மூலம் எளிதில் தெளிந்து கொண்டு பயன்பெறலாம்.

''பாஷ்யகாரர் இதுகொண்டு
சூத்ர வாக்கியங்களை ஒருங்க விடுவர்''

எனவரும் ஆசார்ய ஹ்ருதயத் திருமொழியினாலும்,

''பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தண்
பொருநல்வரும் குருகேசன் விட்டு சித்தன்
துய்யகுல சேகரன்நம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வேல் ஏந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே''

என 'அதிகார சங்கிரக' நூற் செய்யுளில் வேதாந்த தேசிகர் அருளிச் செய்திருத்தல் கொண்டும், இவ்வுண்மை தெளியலாம்.

**பண்பாடு வளர்க்கும் பனுவல்கள்:**

திவ்வியப்பிரபந்தங்கள் மக்களுயிர்க்கு உறுதிபயக்கின்ற உயர் பொருள்களைக் கூறும் நூல்களுள் தலைசிறந்தவை. இவற்றில் வரும் சொல்லும் பொருளும் குற்றம் அற்றுச் சுவை நிரம்பி ''அப்போதைக்கு அப்போது என் ஆராவமுதமே'' என்றபடி, ஓதி ஓதி யுணருந்தொறும் புதிய புதிய இன்ப அநுபவங்களைப் பயக்கும் பண்புடையவை. முமுட்சுக்கள் விரும்பும் பொருள்கள் முற்றிலும் இவற்றின்கண் நிரம்பியுள்ளன. எல்லாரினும் மேம்பட்டு விளங்கும் 'திருமகள் கேள்வன்' தான், இப்பிரபந்தங்களின் தலைவன். இப்பிரபந்தங்களின் சுவையினை முமுட்சுகளும் முக்தரும் நித்யரும் எம்பெருமானும் இடைவிடாது நுகர்ந்து இன்புறுகின்றனர். பயில்வோர் உள்ளத்தில் இவைகள் பக்தியுணர்வைத் தோற்றுவிக்கின்றன. தோன்றிய பக்தியுணர்வினை மேலும் மேலும் வளர்த்து, நம்மைப் பண்பாடு அடையச் செய்கின்றன.

**முடிவுரை :**

இயற்பாக்களான் இயன்று, இசைத்திறம் அமைந்து, ''அரையர்'' என்பவர்களால் அபிநயித்துக் காட்டவும் பெற்று வருதலின், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்க்கும் திவ்வியப் பிரபந்தங்கள் சிறந்த நிலைக்களமாகத் திகழ்கின்றன. மாறன் அலங்கார உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளபடி, சித்து-அசித்து-ஈசுவரன் என்னும் முப்பொருளின் இயல்புகளையும் செப்பமுற விளக்குதலாலும், இவைகளை ''முத்தமிழ்'' நூல்கள் என்றல் பொருந்தும். எனவே தமிழ் மக்களாகிய நம்முடைய ஒப்புயர்வற்ற தெய்விகக் கலைச் செல்வங்கள், திவ்வியப்பிரபந்தங்கள் என்று நாம் பெருமிதம் கொண்டு மகிழலாம். தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் இவற்றைப் போற்றிப் பயின்று பயன் கொண்டு உய்வோமாக.

—ஆசிரியர்

## நாராயணா என்னும் நாமம்

குலந்தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்,
நிலம் தரம் செய்யும்; நீள் விசும்பு அருளும்
அருளொடு பெரு நிலம் அளிக்கும்;
வலம்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்;
நாராயணா என்னும் நாமம்.

—திருமங்கையாழ்வார்

# வயலூர்க் கல்வெட்டுகள்

திரு. டாக்டர். இரா. கலைக்கோவன், திருச்சி

திருச்சியில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில், புத்தூருக்கு மேற்கில், செந்நெல் வயல்களுக்கும் வாழைத் தோப்புகளுக்கும் மத்தியில், வயலூர்த்திருத்தலம்அமைந்துள்ளது. திருச்சி குழுமணி சாலையில், திருச்சியிலிருந்து எட்டாவது கிலோ மீட்டரில், அதவத்தூருக்குச் சற்று முன்னதாக, குமாரவயலூருக்கான குறுக்குச்சாலை வலப்புறத்தில் திரும்புகிறது. பிரிவுப் பாதையில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் எடுப்பான கோபுரத்துடன் அமைந்திருக்கும் இத்திருக்கோயில், கட்டப்பட்ட காலத்தில் சிவத்தலமாகவே இருந்தது. எடுப்பிக்கப்பட்ட காலத்திலும், அதற்குப் பின் ஒரு நூற்றாண்டு காலம் வரையும், 'திருக்கற்றளிப் பரமேசுவரர் கோயில்' என்றுதான் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. பிறகு உத்தமசோழன் காலத்தில், 'திருக்கற்றளிப் பெருமான் கோயில்' அல்லது 'திருக்கற்றளி மகாதேவர் கோயில்' என்று பெயர்மாற்றம் அடைந்தது. குலோத்துங்கச் சோழதேவன் காலத்தில் 'அக்னீசுவரமுடைய மகாதேவர் திருக்கோயில்' என்ற புதுப்பெயரைப் பெற்றது. பிற்காலத்தில் இங்குச் சுற்றாலைத் தெய்வமாக அமைக்கப்பட்டிருந்த முருகனின் புகழ் சிறக்கவும் இது குமாரவயலூராய் வடிவெடுத்தது.

இத்திருக்கோயிலில் உள்ள ஆதிநாயகர் கருவறையின் புறச் சுவர்களில் தென்புறத்திலும், வடபுறத்திலும் இருந்து, இருபது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவை

| | | |
|---|---|---|
| 1. | மன்னன் பெயர் தெரியாத இராசகேசரியின் கல்வெட்டுகள் ... | 8 |
| 2. | முதலாம் பராந்தகனின் கல்வெட்டுகள் ... | 2 |
| 3. | மன்னன் பெயர் தெரியாத பரகேசரியின் கல்வெட்டு ... | 1 |
| 4. | முதலாம் இராசராசனின் கல்வெட்டுகள் ... | 4 |
| 5. | முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு ... | 1 |
| 6. | முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகள் ... | 2 |
| 7. | மன்னன் பெயர் தெரியாத, அடைமொழியற்ற கல்வெட்டுகள் ... | 2 |

இங்குக் கிடைத்திருக்கும் மன்னன் பெயர் தெரியாத இராசகேசரியின் கல்வெட்டுகள் எட்டினுள், ஒன்றுமட்டும் மிக உயரிய ஆட்சியாண்டினையுடையது. இது இராசகேசரியின் முப்பத்தோரம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தையாண்ட . சோழர்களுள் இத்தகு உயரிய ஆட்சியாண்டைக் கொண்ட இராசகேசரிகள், நான்குபேர் தான். முதலாம் ஆதித்தன் முப்பத்தாறு ஆண்டுகளும், முதல் இராசாதிராசன் முப்பத்தாறு ஆண்டுகளும், முதற் குலோத்துங்கன் ஐம்பது ஆண்டுகளும், மூன்றாம் இராசராசன் நாற்பது ஆண்டுகளும் அரசாண்டுள்ளனர். முதலாம் ஆதித்தன் தவிர ஏனைய மூன்று மன்னர்களுக்கும் மெய்க்கீர்த்திகள் உண்டு. பொதுவாக இம்மூவருடைய கல்வெட்டுகள் அனைத்திலும் இம் மெய்க்கீர்த்தி இடம் பெறும். ஆனால் வயலூரிலுள்ள இராசகேசரியின் முப்பத்தோராம் ஆட்சியாண்டுக்கல்வெட்டில் மெய்க்கீர்த்தி இல்லை என்பதுடன், அதன் எழுத்தமைதியும் இக்கல்வெட்டை ஒன்பதாம் நூற்றாண்டுடன் பொருத்துகின்றது. எனவே இக்கல்வெட்டுக்குரியவன் முதலாம் ஆதித்தன் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

இம்முப்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலம், 'விடேல் விடுகு கல்' என்ற பெயரில் நிறுத்தலளவை ஒன்று அக்காலத்தில் வழங்கி வந்த செய்தியை அறிய முடிகின்றது. வயலூர் மகாதேவர் திருக்கோயிலில் ஒரு விளக்கெரிப்பதற்காக வல்லபி நாட்டைச் சேர்ந்த ஒருவர் விடேல் விடுகு கல்லால் அளக்கப்பட்ட முப்பது கழஞ்சு பொன்னைக் கொடையாகத் தந்ததையும், அப்பொன்னைக் கொண்டு ஊரவையார், அவ்வறத்தைத் தொடர்ந்து நிகழ்த்தும் பொருட்டு நிலம் வாங்கியதையும்இக்கல்வெட்டு உணர்த்துகிறது.

ஏனைய ஏழு இராசகேசரிக் கல்வெட்டுகளுள் ஒன்று ஆட்சியாண்டு அறிய முடியாத நிலையில் உள்ளது. ஐந்து கல்வெட்டுகள் இராசகேசரியின் ஏழாம் ஆட்சியாண்டிலும், ஒன்று ஆறாம் ஆட்சியாண்டிலும் வெட்டப்பட்டுள்ளன.

இராசகேசரியின் ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டு, இக்கோயிலில் நடைபெற்ற

விழாக்கள் பற்றிய குறிப்பினைத் தருகிறது. நக்கன்நாகை என்னும் ஆடல்மகள் விஷுத் திருநாளின்போதும், வைகாசித் திங்களில் வரும் இன்னொரு திருவிழா நாளின்போதும் இத்திருக்கோயிலில் விளக்கெரிக்கவும், வழிபாடுகள் நிகழ்த்துவதற்கும் நிலக்கொடை அளித்த செய்தியையும், இவ்வூரின் மேற்கே அமைந்திருந்த அம்பலம் ஒன்றைப் புதுப்பிக்க நிலமளித்தையும் இக்கல்வெட்டால் அறிய முடிகின்றது.

இராசகேசரியின் ஆறாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டு ஒரு நில விற்பனையைக் குறிக்கிறது. இராசகேசரியின் ஏழாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டிருக்கும் ஐந்து கல்வெட்டுகளுள் ஒன்று, நக்கன் கரப்பாலை என்னும் ஆடல்மகள் தந்த பணக்கொடைய்ய ஏற்றுக்கொண்ட வயலூர் ஊரவையார், கோயிலின் இரு தோட்டங்களையும் காத்து வந்த தோட்டக்காரர்களின் நல்வாழ்விற்காக, அப்பணத்துக்குரிய நிலத்தைத் தேவதானமாக விற்றுக்கொடுத்த செய்தியைக் கூறுகிறது. இன்னொரு கல்வெட்டு, ஊரவையார் அழிஞ்சல்கந்தன் என்பாரின் திருமகளாகிய க்ந்தன்சாந்திக்கு நிலமொன்றை வரியிலியாக விற்ற செய்தியையும், அந்நிலத்தைக் கந்தன் சாந்தி; வயலூர் க்கோயிலில் ஒரு விளக்கெரிப்பதற்காகக் கொடையளித்த செய்தியையும் கூறுகிறது. இராச கேசரிவர்மனின் இதே ஆட்சியாண்டைச் சேர்ந்த பிறிதொரு கல்வெட்டு, வயலூரைச் சேர்ந்த எட்டிப்பட்டம் பெற்ற வேட்டன் சேந்தன் என்பாரின் திருமகள் சேந்தன்காரி, இத்திருக்கோயிலில் நந்தா விளக்கொன்று எரிப்பதற்காகப் பணக்கொடை தந்ததும், அத்தொகைக்குரிய நிலமொன்றினை ஊரார் தேவதானமாக விற்றதுமான செய்திகளை விவரிக்கிறது.

நான்காவது கல்வெட்டு சிக்குடியைச் சேர்ந்த சங்கரமாறன் என்னும் அந்தணப் பெண் இக்கோயிலில் ஒரு நந்தாவிளக்கெரிக்கப் பணிக்கொடை அளித்ததையும், அதற்கீடான நிலமொன்றை, விளக்கெரிக்கும் பொருட்டு ஊரார் விற்பனை செய்ததையும் உணர்த்துகின்றது. ஐந்தாவது கல்வெட்டு, குல்வானை என்பவரின் மனைவி தொடப்பெற்றாள் என்பாள், இக்கோயிலில் நந்தாவிளக்கெரிக்கப் பணக்கொடை அளித்தையும், அதற்கு ஈடான நிலமொன்றை ஊரார் விற்றதையும் கூறுகிறது.

இக்கோயிலில் காணப்படும் மன்னன் பெயர் அறியமுடியாத இந்த ஏழு இராசகேசரிக் கல்வெட்டுக்களுள் சில, முதல் இராசராசன் காலத்தனவாகலாம் என்று திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கருதுகின்றார். இந்த ஏழுமே முதல் இராசராசன் காலத்தவை என்பதுதான் என் கருத்தாகும். இந்த ஏழில் ஆறு கல்வெட்டுகள் மகளிர் கொடுத்த கொடைகளைப் பற்றியே பேசுகின்றன. நக்கன்நாகை, நக்கன் கரப்பாலை, கந்தன் சாந்தி, சேந்தன்காரி, சங்கன் மாறன், தொடப்பெற்றாள் என்னும் ஆறு பெண்கள் இந்த ஆறு கல்வெட்டுகளில் கொடையாளிகளாகக் குறிக்கப்பெறுகிறார்கள். இவற்றுள் ஐந்து கல்வெட்டுகள் இராசகேசரியின் ஏழாமாண்டைச் சேர்ந்தவை. ஒன்று ஆட்சியாண்டு தெரியாதது.

இக்கோயிலில் இராசகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டில் கூறப்படும் செய்தி காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய இராசகேசரிவர்மனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுடன் தொடர்புடையதாக இருப்பதால், இக்கல்வெட்டைக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய இராசகேசரிவர்மனை முதலாம் இராசராசனின் கல்வெட்டாகவே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். முதலாம் இராசராசனின் மூன்றாம்ஆட்சியாண்டுக் கல்வெட்டே இங்குக் காணப்படும்போது, அம்மன்னனுடைய ஆறாம், ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் ஏன் இருக்கக்கூடாது? மேலும் இராசகேசரிவர்மனின் ஏழாம் ஆட்சியாண்டில் குறிப்பிடப்படும் சேந்தன்காரி என்ற பெண், இக்கோயிலில் உள்ள பரகேசரிவர்மனின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றிலும் குறிக்கப்பெறுகிறாள்.

சேந்தன்காரி என்ற பெண்ணொருத்தி இக்கோயிலின் இறைவியான உமா பட்டாரகியைத் தன் திருமகளாகத் தத்தெடுத்துக் கொண்டு, இறைவிக்கும், இறைவனுக்கும் திருமணம் செய்வித்து மகிழ்ந்ததுடன், தனக்குச் சீதனமாக வந்த நிலம் முழுவதையும் உமா தேவிக்குரிய நாள்வழிபாட்டிற்கும் படையல்களுக்குமாய் எழுதிவைத்தாள், என்ற சுவையான செய்தியைக் கூறும் இக்கல்வெட்டு உத்தம சோழனுடையதாகக் கருதப்படுகின்கிறது.

உத்தசோழனை அடுத்து ஆட்சிக்கு வந்து இருபத்தொன்பது ஆண்டுகள் அரசாண்ட இராசகேசரி, முதலாம் இராசராசன்தான். உத்தமசோழன் கல்வெட்டில் குறிக்கப்பெறும் சேந்தன்காரி என்னும் பெண் இராசகேசரியின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றிலும் குறிக்கப்பெறுவதைக் காணும்போது, இராசகேசரிவர்மனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் அனைத்துமே முதலாம் இராசராசனுடையவை என்பது தெளிவாகும். அம்மன்னனுடைய மூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டு இங்குக் காணப்படுவதை நினைவில் கொண்டால், இராசகேசரியின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டும்கூட இராசராசனுடையவை என்பது விளங்கும். மேலும் முதலாம் இராசராசன் காலத்தில்தான் ஆடல்மகளிருக்கு வளமும் வாழ்வும் பெருகியது. இதைத் தஞ்சைப்பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் செவ்வனே உணர்த்துகின்றன. ஆட்சியாண்டுகளில் ஏறு வரிசைகூடப் பொருந்தி வருவது நோக்கத்தக்கது. மூன்றாம் ஆண்டு, ஆறாம் ஆண்டு, ஏழாம் ஆண்டு இவை மன்னன் பெயரற்ற இராசகேசரி கேசரிவர்மனின் கல்வெட்டுக்களின் காலம், 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய இராச

கேசரிவர்மன்' என்ற அடைமொழியுடன் பதினோராம் ஆட்சியாண்டு, பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. 'திருமகள் போல' என்ற மெய்க்கீர்த்தியுடன் இருபத்துநான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது. இவையனைத்தையும் நோக்க, இக்கோயிலில் உள்ள மன்னன் பெயர் குறிப்பிடாத மெய்க்கீர்த்தியில்லாத இராசகேசரிக் கல்வெட்டுகள் அனைத்துமே (முப்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தவிர) முதலாம் இராசராசனுடையவைதான் என்று நன்றாகத் துணியலாம்.

இக்கோயிலில் முதலாம் பராந்தகனின் மூன்று கல்வெட்டுகள் முறையே அவனுடைய 7,14,41 ஆம் ஆண்டுகளைச் சார்ந்தனவாக உள்ளன என்று திரு.எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் குறிக்கிறார். இது தவறான செய்தியாகும். இக்கோயிலில் முதலாம் பராந்தகனின் கல்வெட்டுகள் இரண்டுதான் காணப்படுகின்றன. அவை அம்மன்னனுடைய ஏழாம் ஆட்சியாண்டிலும், நாற்பத்தோராம் ஆட்சியாண்டிலும் வெட்டப்பட்டுள்ளன. திரு எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் குறிப்பிடும் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, கல்வெட்டறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது. வயலூர்த் தலவரலாற்றில் காணப்படும் கல்வெட்டுகள் பகுதியிலும் இப்பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிக்கப்படவில்லை. காணப்படாத இக்கல்வெட்டைத் திரு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் எப்படிச் சேர்த்துக்கொண்டார் என்பது வியப்பாகவே உள்ளது.

முதலாம் பராந்தகனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, வயலூரைச் சேர்ந்த நக்கன்[3] மறப்பிலிக்கு ஊரார் நிலவிற்பனை செய்த செய்தியைக் கூறுகிறது. இம்மன்னனின் நாற்பத்தோரம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு காவிரியின் தெற்குக் கரையில் அமைந்திருந்த பிரமதேயமான நந்திவர்மமங்கலத்தைச் சேர்ந்த நாலாயிரத்து முந்நூற்றுவன் எனப்படும் சந்திரசேகர அரமைந்தன், இத்திருக்கோயிலில் பணியாற்றவும், திருப்பதியம் பாடவும் மூன்று பெண்களைக் கொடையாக அளித்த சுவையான தகவலைத் தருகிறது. திரு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் இக்கல்வெட்டைப் பற்றி எழுதுமிடத்தில், 'முதற் பராந்தகன் தன்னுடைய 35 ஆம் ஆண்டுக்கு முன் கல்லல் என்னும் ஊரிலிருந்து பகைவர்களிடம் கைப்பற்றி வந்த பெண்டிர் மூவரை உறையூர்க் கூற்றத்திலுள்ள வயலூர்க் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பம் செய்யவும், திருச்சாமரம் வீசவும் பணியாட்களாக நியமித்தான் என்று குறிப்பிடுகிறார். கல்வெட்டறிக்கை சொல்வதற்கும் இவர் சொல்வதற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. கல்வெட்டறிக்கையில் சந்திரசேகர அரமைந்தனே இம்மகளிரைக் கொடையளித்தான் என்றிருக்க, இவர் முதற் பராந்தகன் தான் கைப்பற்றி வந்த மகளிரை நியமித்ததாகக் கூறுகிறார். இச்செய்தி திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்துக்கு எங்கிருந்து கிடைத்தது? மேலும் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டிருப்பது பராந்தகனின் நாற்பத்தோராம் ஆண்டில். அவன் இப்பெண்டிரைக் ரைக் கைப்பற்றியதாகக் கூறுவது முப்பதைந்தாவது ஆண்டில். முப்பத்தைந்தாவது ஆண்டிலிருந்து நாற்பத்தோராவது ஆண்டுவரை, அதாவது கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் இவர்கள் எங்கிருந்தனர்? என்ன செய்து கொண்டிருந்தனர்? முதலாம் பராந்தகனின் இந்த நாற்பத்தோராவது ஆண்டுவரை, அதாவது கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் இவர்கள்எங்கிருந்தனர்? என்ன செய்து கொண்டிருந்தனர்? முதலாம் பராந்தகனின் இந்த நாற்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மீண்டும் படிக்கப்படல் வேண்டும். அப்போதுதான் கல்வெட்டறிக்கை சரியா? திரு எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் தெரிவித்தது சரியா? என்பது தெளிவாகும்.

இக்கோயிலில் முதலாம் இராசராசனின் அடைமொழியுடன் அல்லது மெய்க்கீர்த்தியுடன் கூடிய மூன்று கல்வெட்டுகளும், இராசகேசரிவர்மன் என்ற பெயரில் ஒரு கல்வெட்டும் காணப்படுகின்றன. ஏற்கனவே பார்த்த இராசகேசரிவர்மன் கல்வெட்டுகள் ஏழும் அம்மன்னனுடையவைதான் என்பதை மறுத்தலாகாது. ஆக இம்மன்னனின் பதினொரு கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. இக்கோயில் முதலாம் இராசராசனின் செல்லப்பிள்ளையாய் விளங்கியமைக்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ?

முதலாம் இராசராசனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, உறையூர்க் கூற்றத்திலுள்ள வயலூரைச் சேர்ந்த பெருமான் விடங்கன் என்னும் வணிகனால் 'ஐந்நூற்றுவன்' என்ற பெயரில் ஒரு மண்டபம் கட்டப்பட்டதையும், அம்மண்டபத்தில் விளக்கெரிக்க, ஊரார் அவ்வணிகனுக்கு வரிநீக்கிய நிலமொன்றினை விற்றுக்கொடுத்ததையு[ம்] கூறுகிறது.

'காந்தளூர்ச்சாலையில் கலமறுத்தருளிய கோராசகேசரிவர்மன்' என்று தொடங்கும் இம்மன்னனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இதே மன்னனுடைய மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட பெருமான் விடங்கன், திருவெள்ளறை மயிலாட்டி என்றும் அழைக்கப்பட்டான் என்பதைத் தெரிவிப்பதோடு, இவன் கட்டிய ஐந்நூற்றுவன் என்ற மண்டபத்தைத் தொடர்ந்து சிறப்பாகப் பாதுகாப்பதற்கும் இவ்வணிகனுக்கு ஊரார், தென்னூரைச் சேர்ந்த பல்லங்குடியில் நிலம் விற்றுக் கொடுத்ததையும் கூறுகிறது. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் தென்னூர் இப்போது திருச்சியில் தில்லைநகர்ப் பகுதிக்கருகில் உள்ளது குறிப்பிடத்தக்கது. காந்தளூர்ச்சாலையில் கலமறுத்தருளிய கோராசகேசரிவர்மன் என்று தொடங்கும் இம்மன்னனின் பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கோயில் பணியாட்கள் இருவர் ஒரு பெண்ணிடமிருந்து பெற்றுக்கொண்ட பணத்திற்

காக இறைவனுக்குக் காணிக்கைகள் செலுத்த ஒப்பந்தம் செய்துகொண்ட தகவலைத் தருகிறது.

இராசராசசோழனின் புகழ்பெற்ற மெய்க்கீர்த்தியான ‘திருமகள் போல’ என்னும் தொடரைத் தொடக்கமாகக் கொண்ட கல்வெட்டொன்று தினையன் ஊரன் என்பானுக்கு வயலூர்த் திருக்கோயிலில் திருப்பதியம் பாடுவதற்கும் ஊரவையார் வரிநீக்கி, நிலக்கொடை அளித்தமையைக் குறிக்கின்றது. இராசராச சோழனின் இறைப்பற்றும், திருப்பதிகங்களில் அவனுக்கிருந்த ஈடுபாடும், அவற்றைக் கோயில்களில் ஒலிக்கச்செய்ய அவன் மேற்கொண்ட முயற்சிகளும் இக்கல்வெட்டால் உணரக்கிடக்கின்றன.

முதலாம் இராசேந்திரனின் நான்காம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று இங்குக் காணப்படுகிறது. இது, இக்கோயில் இறைவனுக்குச் சோலைதேவன் என்பான் பொற்பூவொன்றை அளித்த செய்தியைக் கூறுகிறது. இதனருகில் உள்ள துண்டுக் கல்வெட்டொன்று மாறன் நக்கன் என்ற உறையூர் நாட்டுச் செம்பியன் கீழ்வேளான் என்பான் இக்கோயிலுக்கு நிலக்கொடையளித்த செய்தியைத் தருகிறது.

முதலாம் குலோத்துங்கனின் இரண்டு கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. இம்மன்னனின் ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டு, வயலூரில் உள்ள அக்னீசுவரமுடைய மகாதேவர் கோயிலில் விளக்கொன்று எரிப்பதற்காக தேவதானமாக நிலக்கொடையளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. இம்மன்னனின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விளக்குக் கொடையைப் பற்றிப் பேசுகிறது.

மன்னன் பெயர் , ஆட்சியாண்டு எதுவும் அறியமுடியாத கல்வெட்டொன்று இக்கோயிலில் விளக்கெரிக்க நெய் வழங்கும் பொருட்டு, இவ்வூராரின்பொறுப்பில் நிலமொன்று கொடையாகத் தரப்பட்ட செய்தியைக் கூறுகிறது. கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இது முதற் குலோத்துங்கனுடையதாகலாம் என்று கல்வெட்டாய்வாளர்கள் ஊகிக்கிறார்கள்.

மன்னன் பெயர் அறிந்து கொள்ள முடியாத, ஆட்சியாண்டு மட்டும் இருக்கும் கல்வெட்டொன்று இக்கோயிலில் உள்ளது. இது சோழமன்னன் ஒருவனின் ஏழாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டால், இக்கோயிலுக்குக் கொடையாகத் தரப்பட்ட பத்துக்கழஞ்சு பொன், நிலமாக மாற்றப்பட்டு, அதன் வருவாயிலிருந்து, இக்கோயில் இறைவனுக்கு நாள்தோறும் நடத்தப்படும் மூன்று வழிபாடுகளின்போதும், இரண்டு சங்குகளை ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்டதை அறிகிறோம். ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாக இது இருப்பதாலும், இதன் எழுத்தமைதி பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததுபோல் இருப்பதாகக் கல்வெட்டு ஆய்வாளர்கள் கருதுவதாலும் துணிந்து இதை முதலாம் இராசராசனுடையதென்று கூறலாம். இதையும் சேர்த்தால் இக்கோயிலில் பன்னிரண்டு கல்வெட்டுகள் முதலாம் இராசராசன் காலத்தில் வெட்டப்பட்டன என்பதை அறிந்து மகிழலாம்.

வயலூர்க்கோயிலில் காணப்படும் இவ் இருபது கல்வெட்டுகளும் சோழர் காலத்து மகளிர்நிலை, அவர் தம் உரிமைகள், மகளிருக்குச் சீதனம் வழங்கப்பட்ட செய்தி, அச்சீதனத்தை அவர்கள் தங்கள் விருப்பம்போல் பயன்படுத்தத் தரப்பட்டிருந்த உரிமை, மனமான மகளிரும் அறம் செய்யுமளவு உரிமை பெற்றிருந்த மாண்பு, வணிகர்களுக்கு ‘எட்டி’ என்னும் சிறப்புப் பட்டம் தரப்பட்ட செய்தி கோயில்களில் திருப்பதியம் ஓதப்பட்டமை, மக்கள் இறையிடமும், இறைக் கோயில்களிடமும் கொண்டிருந்த நம்பிக்கை, ஈடுபாடு முதலிய பல செய்திகளை நமக்கு உணர்த்துகின்றன. நிலக்கொடை, பணக்கொடை, பொற்கொடை போல மகளிரும் கூட கோயில்களுக்குக் கொடையாகத் தரப்பட்டனர் என்பதும் இக்கல்வெட்டுகள் உணர்த்தும் செய்தியாகும்.

முதலாம் ஆதித்த சோழனால் கட்டப்பெற்று, முதலாம் பராந்தகனால் புரக்கப்பட்டு முதலாம் இராசராசனின் செல்லப் பிள்ளையாய் விளங்கிச் சீரும் சிறப்போடும் வளர்ந்து வாழ்ந்த இத்திருக்கோயில் இன்று புதுப்பொலிவோடு, சிவத்தலம் முருகன் தலமாக மாறின நிலையில், குமரன் குடியிருக்கும் குமாரவயலூராய்ச், சதுரதாண்டவப்பெருமானும் சக்தியும் விளங்கும் எழில் ஆலயமாய்க் காட்சியளிக்கிறது. இக்கோயிலின் தலைமை சிவாச்சாரியார் ஜம்பு குருக்களைப் பற்றி எழுதாவிட்டால் இக்கட்டுரை நிறைவு பெற்றதாகாது. அவரது வழிபாட்டில் தன்னை இழக்காதார் இருக்க முடியாது. கல்லையும் கரைக்கும் அந்த வழிபாட்டில் இதயமிழந்து முருகன் திருவடிகளில் மூழ்கிப் போனவர்களுள் நானும் ஒருவன். அவரது உதவியாளர்களும் அன்பு நிறைந்தவர்கள். இக்கோயில் நிர்வாக அதிகாரிகள் திரு . ஏகாம்பரநாதன், திரு. தியாகராசன் மற்றும் அறங்காவலர்கள் அனைவருமே இக்கோயிலின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் பாடுபட்டுவரும் உண்மையன்பர்கள்.

பழம்பெறும் கோயிலான இவ்வயலூர்த் திருக்கோயில் ஆற்றிவரும் பொதுநலப் பணிகளும் சிறப்புக்குரியவை. இலவச சித்த மருத்துவ நிலையம், அன்பு இல்லம், பயணிர் விடுதி, திருமணக்கூடங்கள் என்று பலவகைகளில் இக்கோயிலின் சமுதாயப்பணிகள் கிளைத்துச் செழித்து வளர்ந்தோங்கி வருகின்றன.

—(8-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்கரம், வேழமுத்திரையிலும் உள்ளன. பின்கரங்களில் வலப்புறம் துடியும், இடப்புறம் தீயகலும் காணப்படுகின்றன. வலதுகாலை ஊன்றி, இடதுகாலைத் தூக்கி ஆனந்தத் தாண்டவராய்க் காட்சி தருகிறார். விரிசடை அழகனாய்க், கொக்கிறகும் ஊமத்தம்பூவும் செருகிய முடியுடன், ஆடைகள் பறக்க, அகிலமே தன்னிலை மறக்க இறைவன் ஆடும் இந்த எழிற் கோலத்தில் தன்னையிழக்காதார் யார்? இத்திருமேனியின் வார்ப்புத் திறன் நம்மை வியப்புக்குள்ளாக்குகிறது. உடலமைப்பு நுணுக்கங்களும், ஆடல் தோற்றத்திற்கேற்ப வடிவக்கப்பட்டுள்ள வளைவுகளும் நெறிவுகளும் சோழநாட்டு வார்ப்புக்கலை அறிஞர்களின் திறமைக்கு எடுத்துக்காட்டு. இந்நெடியநடராசர் திருமேனியையும் சிவகாமி அன்னையின் வடிவத்தையும் போற்றி வழிபட அறக்கட்டளையொன்று நிறுவப்பட்டுள்ளது. இதற்கென்று தனியே ஒரு அறங்காவலரும் இருக்கின்றார்.

இம்முன் மண்டபத்தின் வடபுறத்தில் அம்மன் கோயிலுக்குச் செல்ல வழியுள்ளது. முன்மண்டபத்தை அடுத்து மகாமண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் மூன்றாம் குலோத்துங்கச்சோழன் காலத்தில் புகழாபரண மண்டபம் என்று அழைக்கப்பட்டதாக அம்மன்னனின் பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இம்மண்டபத்தின் தென்புறத்தில் வெளிச்சுற்றுக்குச் செல்ல வழியொன்று அமைந்துள்ளது. உள்மண்டபத்து வாயிலை வாயிற்காப்போர் சிற்பங்கள் அணி செய்கின்றன. புடைத்த விழிகளும், செவிகளில் ஆந்தைக் குண்டலங்களுமாய், இடக்கரம் வியப்பு முத்திரைகாட்ட, வலக்கரம் கதையின் மீதிருக்க, இச்சிற்பங்களின் அழகே அழகு தான்.

நான்கு தூண்களுடன் கூடிய இந்த உள் மண்டபத்தை அடுத்துக் கருவறை அமைந்துள்ளது. இறைவன் லிங்க வடிவில் எழுந்தருளியுள்ள இத்திருமுன் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் சிவாச்சாரியார் திரு நடராச குருக்கள் இறைப் பற்றும் அருள்நோக்கும் கொண்டவர். கோயிலின் வாழ்வும் வளர்ச்சியுமே குறிக்கோளாய்க் கொண்டவர்.

இத்தலத்து இறைவியின் பெயர் அங்கவள நாயகி. அழகிய உடலமைப்பு கொண்ட அம்மை என்பதே இதன் பொருள். இவ்வழகிய நாயகியின் திருக்கோயில், மையக்கோயிலின் வடபுறத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

கருவறையின் புறச்சுவர்களில் உள்ள தேவகோட்டங்களில் தென்புறம் தென்திசைக் கடவுளும், கிழக்கில் லிங்கோத்பவரும், வடபுறம் நான்முகனும் காணப்படுகின்றனர். உள் மண்டபத்தின் தென்புறத்தில் உள்ள கோட்டங்களில் அகத்தியர், பிள்ளையார் ஆடவல்லான் வடிவங்களும், வடபுறக்கோட்டங்களில் அம்மையப்பர், கொற்றவை, பிச்சை யுகக்கும் பெம்மான் வடிவங்களும் அமைந்துள்ளன. செம்பியன் மாதேவி காலத்தைச் சேர்ந்த இச்சிற்பங்களின் கலைப்பொலிவும், செதுக்குத் திறனும் நம் கண்களை வியப்பால் மலர்த்தி, நெஞ்சைக் களிப்பில் ஆழ்த்துகின்றன. இச்சிற்பங்களுள் பிச்சையுகக்கும் பெம்மான், கொற்றவை, ஆடவல்லான் முதலிய தெய்வ வடிவங்கள் நம் நெஞ்சை விட்டகலா சிற்பங்களாகும்.

பிச்சையுகக்கும் பெம்மான் ஆடை ஏதுமின்றிக் காலணிகள் அணிந்து, நின்ற நிலையில் அமைதியே உருவாகக் காட்சியளிக்கிறார். வலது பின்கரத்தில் துடியும், இடது பின்கரத்தில் வெண்சாமரமும் கொண்டுள்ள இப்பெருமானின் வலது முன்கரம் மானிற்குப் புல் அளிப்பதுபோல் உள்ளது. இடது முன்கரத்தில் தலையோடு உள்ளது. இடுப்பில் பாம்பை இடுப்புக் கயிறு போலக் கட்டியிருக்கிறார்.

எட்டுக் கரங்களுடன் எருமையின் தலை மீது நிற்கும் கொற்றவையின் தலைக்கு மேல் குடை காணப்படுகிறது. குடையின் சற்றுக்கீழ் தேவிக்கு இருபுறமும் வானவர்களின் வடிவங்கள் காணப்படுகின்றன. வலது முன்கரம் உடைந்திருப்பினும் அமைப்புமுறை, காப்பு முத்திரையைக் கண்முன் நிறுத்துகிறது. வலது பின்கரங்களில் கீழிருந்து மேலே வாள், முத்தலை ஈட்டி, சக்கரம் முதலிய படைக்கலன்கள் உள்ளன. இடது பின்கரங்களில் கீழிருந்து மேலே கேடயம், வில், சங்கு முதலிய படைக்கலன்கள் காணப்படுகின்றன.

இங்குள்ள ஆடவல்லானின் அழகுச் சிற்பம் இக்கோயில் செப்புத் திருமேனிகளைப் போலவே சிறப்பு வாய்ந்தது. வலக்காலை முயலகன் மீது ஊன்றி, இடக்காலைத் தூக்கி வலப்புறம் வீசிய நிலையில், விரிசடைக் கூத்தனாய்க் காட்சியளிக்கும் இறைவனின் திருமுகத்தில் பெருமித உணர்வுகள் பொங்கி வழிவதைக் கண்டு மகிழலாம். இறைவனின் வலது முன்கரம் காப்பு முத்திரையிலும், இடது முன்கரம் வீசியகரமாய் வேழ முத்திரையிலும் அமைந்துள்ளன. வலது பின்கரம் துடியையும், இடது பின்கரம் தீயகலையும் ஏந்தியுள்ளன. வலது முன்கரத்தில் மணிக்கட்டுக்குச் சற்று மேலே பாம்பொன்று பின்னிய நிலையில் காட்டப் பெற்றுள்ளது. இறைவனுக்கு வலப்புறம் பிருங்கி முனிவரும் இடப்புறம் காளியும் ஆடற் கோலத்தில் காணப்படுகின்றனர். முயலகனுக்குக் கீழே அமர்ந்த நிலையிலுள்ள குள்ளச் சிறுபூதங்கள் இசைக்கருவிகளை இயக்குகின்றன. வலப்புறத்தில் நந்தி குடமுழா வாசிக்கிறது. புறச்சுவரின் தென்புறத்தில் இத்தெய்வ வடிவங்கள் தவிர இன்னும் இரண்டு சிற்பங்களைக் காணலாம். ஒன்று இக்கோயிலைச் செம்பியன் மாதேவியார் ஆணைப்படி கற்றளியாக எடுப்பித்த சாத்தன் குணபட்டன் என்ற ஆலத்தூர் அரசந்திரசேகரனுடைய வடிவமாகும். இருகரமும் கூப்பியபடி நின்ற நிலையில் அமைந்துள்ள இவ்வடிவம் ஆடவல்லானுக்கு வலப்புறம், ஆடவல்லானை நோக்-

கிய நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பெருமகனின் பணிகளைப் பாராட்டி ராசகேசரி மூவேந்த வேளான் என்ற சிறப்புப் பட்டம் இவனுக்கு வழங்கப்பட்டதாய் இங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.

இன்னொரு சிற்பத்தில் கண்டராதித்த சோழர் சிவலிங்கத்தை வழிபடும் காட்சி காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் இடது மூலையில் ஆவுடையார் மீது சிவலிங்கம் காட்டப்பட்டுள்ளது. சிவலிங்கத்தின் அருகே இடப்புறம் ஒரு ஆண்வடிவம் நின்ற நிலையில் காணப்படுகிறது. சிவலிங்கத்தின் சற்றுத்தள்ளி அமர்ந்த நிலையில் ஒரு ஆண்வடிவம் காட்டப்பட்டுள்ளது. மன்னர்க்கே உரிய எடுப்பும் பெருமிதமும் தவழும் விதத்தில் இவ்வடிவம் காட்டப்பட்டுள்ளதால், இது இச்சிற்பத்தின் கீழுள்ள கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் கண்டராதித்தர் எனலாம். மன்னருக்குப்பின் முன்னொரு ஆண்வடிவம் நின்ற நிலையில் வலது கையில் சாமரமும் இடது கையில் வாளும் கொண்டு காட்சி தருகிறது. இதையடுத்து இன்னொரு ஆண்வடிவம் அமர்ந்த நிலையில் இடக்கரத்தில் வெண்கொற்றக் குடையுடன் காட்சியளிக்கிறது. இச்சிற்பத்தின்கீழே, ''ஸ்வஸ்திஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவடிகளார் ஸ்ரீசெம்பியன் மாதேவியார் தம்முடைய திருமகனாரான ஸ்ரீமதுராந்தக தேவரான ஸ்ரீஉத்தமசோழன் திருராச்சியம் செய்தருளாநிற்கத் தம் உடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் திருநாமத்தால் திருநல்லம் உடையார்க்கு திருக்கற்றளி எழுந்தருளுவித்து, இத்திருக்கற்றளியிலேயே, திருநல்லம் உடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளித்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் இவர்'' என்ற கல்வெட்டுக் குறிப்பு காணப்படுகிறது.

இச்சிற்பத்தொகுதியைப் பற்றி எழுதும்போது திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், 'மூலத்தானத்தின் தென்சுவரில் லிங்கத்தை வழிபட்டுக் கொண்டிருக்கும் கண்டராதித்தன் அவன்பின் நிற்கும் செம்பியன் மாதேவி' என்று குறித்துள்ளார். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் பணியாற்றும் திரு. வெ. வேதாசலம் அவர்கள் தன்னுடைய செம்பியன் மாதேவியார் என்ற கட்டுரையில், பின்வருமாறு எழுதுகிறார், 'மாயவரம் வட்டத்தில் இவர் எழுப்பிய கோனேரிராசபுரம் கோயிலில் இவராலேயே எழுப்பப்பட்ட இவரது கற்சிலை கருவறைச் சுவரில் வடக்கு நோக்கி உள்ளது. கண்டராதித்தன் சிவலிங்கத்தோடு சேர்ந்து நிற்கிறார். அவரை மாதேவியார் மண்டியிட்டு சாமரம் வெண்குடையைக் கையில் ஏந்திய பணிப் பெண்கள் பின்நிற்க வணங்குகின்றாராக சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் தெற்குச் சுவற்றில் செம்பியன் மாதேவிசிலை ஒன்றும் உள்ளது.

ஆனந்த விகடனில் திருத்தலப் பெருமை என்ற தலைப்பின் கீழ் தொடர் கட்டுரை எழுதிவரும் திரு. பரணீதரன், இக்கோயிலில் இருக்கும் சிற்பத்தின் ஒளிப்படத்தை வெளியிட்டு அதனடியில் செம்பியன் மாதேவியார் சிவபூஜை செய்யும் சிற்பம் என்று அடிக்குறிப்பு வெளியிட்டிருக்கிறார்.

திருநல்லம் உமைக்கு நல்லார் கோயிலின் (அருள்மிகு உமாமகேசுவரர் கோயில், கோனேரிராசபுரம்) கருவறைத் தென்புறச் சுவரிலுள்ள சிவ வழிபாட்டுச் சிற்பத்தைப் பற்றிய இம்மூவரது கருத்துமே பிழையாக இருக்கின்றன. சிவலிங்கத்தோடு மன்னர் நெருங்கி, சேர்ந்து இருத்தல் இயலாத காரியம். மேலும் இச்சிற்பத் தொகுதியில் சிவலிங்கத்திற்கு அருகில் இருக்கும் ஆண்வடிவம் சிவலிங்கத்தின் மேல் கொன்றை மாலையைச்சூட்டுவதுபோல் காட்டப்பட்டுள்ளது. அரசர்க்குரிய உடல் அமைப்பின்றி சிவாச்சாரியரைப் போன்ற உருவ அமைப்புடன் காணப்படும் இவ்வடிவத்தை கண்டராதித்தர் எனக்கூறுவது சற்றும் பொருந்தாது. சிவலிங்கத்திற்கு முன் வழிபடும் நிலையில் அமர்ந்திருப்பது ஆண்வடிவம். சிற்பங்களில் ஆண்வடிவத்தையும் பெண்வடிவத்தையும் பிரித்தறிய உதவுவது மார்பகங்களும் ஆடைகளும்தான். இச்சிற்பவடிவம் மார்பகங்களின்றிக் காட்டப்பட்டுள்ளது. காலை மடித்து அமர்ந்திருப்பதால்ஆடைகளைச் சரியாகக் காண முடியவில்லை. செம்பியன் மாதேவியின் வடிவம் பல ஊர்களில் உள்ளது. செம்பியன் மாதேவியிலுள்ள கைலாசநாதர்கோயில், சக்கரப்பள்ளியிலுள்ள சக்கரவாகீசுவரர் கோயில் போன்ற எடுத்துக் காட்டுகளைக் கூறலாம். இவைகளில் எல்லாம் இவ்வடிவம் பெண் வடிவம் என்பதை எளிதாகக் கண்டறியும்படி மார்பகங்கள் காட்டப்பட்டுள்ளன. திருநல்லத்துச் சிற்பத்தொகுதியில் அமர்ந்திருக்கும் முதல் வடிவம் பெண்வடிவமே இல்லையென்றான பிறகு, அது யாரென்ற கேள்வி பிறக்கிறது. இச்சிற்பத் தொகுதிக்குக் கீழுள்ள கல்வெட்டே அதற்குப் பதில் கூறுகிறது. 'இத் திருக்கற்றளியிலேயே திருநல்லம் உடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளிவித்த ஸ்ரீகண்டராதித்த தேவர் இவர்.

இந்த அமர்ந்திருக்கும் அரசர் வடிவத்துக்குப் பின்னால் ஒருவடிவம் நிற்கிறது. இன்னொருவடிவம் அமர்ந்துள்ளது. இவ்விரண்டு வடிவங்களுமே ஆண்வடிவங்கள். இதில் நிற்கும் வடிவத்தைச் செம்பியன் மாதேவி என்று எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். நிற்கும் வடிவம் இடையில் கோவண ஆடை உடுத்துள்ளது. இதன் வலக்கையில் சாமரமும் இடக்கையில் வாளும் உள்ளன. எந்தப் பேரரசியாவது இந்தக் கோலத்தில் இருக்க முடியுமா? எல்லாவற்றிற்கும் மேலாக இது ஆண்வடிவம், கண்ணுள்ளவர் யாவரும் இதைப் பெண் வடிவமாகக் கொள்ள முடியாது.

இந்த நிற்கும் வடிவத்துக்குப்பின் அமர்ந்திருக்கும் ஆண்வடிவம் வலக்கையை முஷ்டி முத்திரையில் மார்போடு சேர வைத்துள்ளது.

இடக்கையில் வெண்கொற்றக் குடையைப் பிடித்துள்ளது. இது ஒரு அமைச்சன் அல்லது உயர்தரத்து அலுவலன் என்று கொள்ளலாம். பெண் வடிவமே இல்லாத இந்தச் சிற்பத் தொகுதியில் செம்பியன் மாதேவியும் அவரது பணிப்பெண்களும் இருப்பதாகக் கற்பனை செய்திருக்கும் பாங்கு வியப்பைத் தருகிறது. இச்சிற்பத் தொகுதியின் கீழிருக்கும் கல்வெட்டு எந்த ஒரு இடத்திலும், இதில் செம்பியன் மாதேவி இடம் பெற்றிருப்பதாகக் கூற வில்லை. இந்நிலையில் இப்பெரியவர்கள் ஏன் இப்படி குழம்பினார்கள் என்பது புதிராகவே உள்ளது.

மையக்கோயிலின் உள்திருச்சுற்றில் கருவறை உள்மண்டபத்தை ஒட்டி மூடிப்பட்ட நிலையில் அமைந்திருக்கும் தாழ்வாரம், திருநடைமாளிகை என்று குறிக்கப்படுகிறது. இங்குள்ள தூண் ஒன்றில் இத்திருநடைமாளிகை ஆசனூர் அருள்மொழித் தேவனான வயநாட்டரையனால் எடுப்பிக்கப்பட்ட செய்தி கல்வெட்டாகக் குறிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் நாற்பத்திரண்டும் சோழர் காலத்தைச் சேர்ந்தவையாகும். உத்தமசோழன் காலம் முதல் மூன்றாம் இராசராசன் காலம் வரையில், அரியணை ஏறிய சோழவேந்தர்கள் பெரும்பான்மையோரது கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. ஏறத்தாழப் பத்துக் கல்வெட்டுக்கள் முதலாம் இராசேந்திரன் காலத்திலும், ஏழு கல்வெட்டுக்கள் முதற் குலோத்துங்கன் காலத்திலும், நான்கு கல்வெட்டுக்கள் உத்தமசோழன் காலத்திலும் வெட்டப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்கள் பல சுவையான செய்திகளைத் தருவதுடன், அக்காலத்துக் கோயில் ஆட்சிமுறையைப் பற்றியும் மிகத் தெளிவாக விளக்குகின்றன. உத்தமசோழனின் எட்டாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டே இங்குள்ள கல்வெட்டுக்களுள் முக்கியமானதும் சிறப்புக்குரியதுமாகும். இக்கல்வெட்டு செம்பியன் மாதேவி திருநல்லத்தில் இக்கற்றளியை எடுப்பித்ததையும், உத்தம சோழனுடைய மூன்றாம் ஆட்சியாண்டில் அப்பெருமாட்டி, திருநல்லம் ஊரவையாரிடம் விலைக்கு வாங்கிய, ஆண்டிற்கு 224 கலம் நெல்வருமானம் வரக்கூடிய இரண்டு வேலி நிலத்தை இக்கோயிலுக்குரிய கண்டராதித்தன் என்னும் பெயரிலமைந்த பூந்தோட்டத்தையும், ஏனைய நந்தவனங்களையும் காப்பதன் பொருட்டு நந்தவனப் புறமாக விடுத்த செய்தியைக் குறிக்கிறது. மிக நீளமான இக்கல்வெட்டு உத்தமசோழன் தன் ஏழாவது எட்டாவது ஆட்சியாண்டுகளில் இக்கோயிலுக்குத் தந்த கொடைகளையும் கோயிலாட்சியையும் மிகத் தெளிவாகக் கூறுகிறது.

உத்தமசோழன் தன் ஏழாம் ஆட்சியாண்டில் கடம்பூரின் வடபகுதியிலுள்ள பிச்சன் கோயில் அரண்மனையில் முகாமிட்டிருந்த போது, பரகேசரி மூவேந்த வேளாண் என்பார், செம்பியன் மாதேவியார் திருநல்லம் கோயில். திட்டங்களை விரிவுபடுத்தவும் அவ்வூரில் இருபத்தைந்து அந்தணர்களுக்கு நாடோறும் உணவிடும் அறச்சாலையொன்றை கண்டராதித்தரின் ஆன்ம லாபத்திற்காக நிறுவவும் கொண்டிருந்த எண்ணத்தைக் கூறினார்.

திருநல்லம் கோயிலுக்கு மானியமாகப் பூங்கொடியில் பன்னிரண்டு வேலி நிலமும், முசிட்டக்குடியில் நான்குவேலி நிலமும் இருந்தன. அவற்றிலிருந்து முறையே அறுநூறு கலமும், இருநூறு கலமும் ஆக மொத்தம் எண்ணூறு கலம் நெல் அரசனுக்குப் பஞ்சவாரமாக வரிகட்டப்பட்டு வந்தது. உத்தமசோழன் தன் அன்னையின் எண்ணத்தை நிறைவேற்ற, பூங்குடி நிலத்திலிருந்து வந்த அறுநூறு கலம் நெல்லையும் தன் ஆளும் ஆட்சியாண்டு முதல் வழங்க வேண்டுவதில்லையென ஆணையிட்டான். சில நாட்களுக்குப் பிறகு இவ்வருமானமும் போதாமற் போனதால், வெண்ணாட்டு ஈழநலம் கிராமத்தில், ஆண்டுக்கு 1590 கலம் நெல்லை வருமானமாகத் தரவல்ல பன்னிரண்டு வேலி நிலத்தை, இக்கோயிலுக்குத் தேவதானமாகவும், அறச்சாலைக்கு வழங்கப்படும் சாலாபோகமாகவும் வழங்கினான்.

உத்தமசோழன் தன் எட்டாவது ஆட்சியாண்டில் காரைக் காட்டுப் பனையூரில் முகாமிட்டிருந்தபோது திருநல்லத்திலிருந்துதனக்கு பஞ்சவாரமாக வரவேண்டிய முப்பத்தொன்பது கலநெல்லையும் மூன்று கழஞ்சுக்கு மேற்பட்ட பொன்னையும் தனக்கு வழங்க வேண்டாமென்று ஆணையிட்டான். அத்துடன் திருநல்லத்திலுள்ள எழுபது வேலி நிலத்தில் மூன்றரை வேலிநிலத்தை இறையிலியாக்கிஅதனைத் திருநல்லம் இறைவனுக்குத் திருநாமத்துக் காணியாக வழங்கினான்.


இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் பூங்குடியும் முசிட்டக்குடியும் இன்றும் கோனேரிராசபுரம் எனப்படும் திருநல்லத்துக்கு அருகில் விளங்குவது குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டின் பிற்பகுதி கோயில் நிலங்களின் வருமானத்தைக் கோயிலின் பல்வகைப்பட்ட செயல்பாடுகளுக்குச் செலவழிக்கத் திட்டமிட்ட முறைகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

இறைவனுக்குரிய பலவகைப்பட்ட படையல்கள், சந்தனக்காப்பு, தூபம், விளக்குகள், செம்பியன் மாதேவியின் பிறந்த மீனான கேட்டையன்று நிகழ்த்தப்படும் திருப்பலிச் சடங்குக்கு வேண்டிய செலவினங்கள், மார்கழித்திருவாதிரை, வைகாசி விசாகம் ஆகிய திருவிழாக்களின்போது அந்தணர்களுக்கும் ஏனைய அடியார்களுக்கும் உணவிடல், சந்தனம் அரைப்பாருக்கு ஊதியம், செப்புத் திருமேனிகள் வலம் வரும்போது விரிப்புகள் தூக்குவாருக்கு ஊதியம், பூப்பறிப்பவர் மாலை தொடுப்பவர் கோயிலைப் பெருக்கித் தூய்மை செய்பவர், இசைக்கலைஞர்கள் முரசறைபவர் காளமும் சங்கும் முழக்குபவர், மெய்க்காவற்காரர்கள், திருப்பதியம் ஓதுபவர்கள் கோயில்

திருக்காரியம் பார்க்கும் அந்தணர்கள், கோயிற்கணக்கர், கோயிலுக்குச் சக்கரமிடுபவர், திருப்பரிவட்டத்துக்குச் சாயம் தோய்ப்பவர், இறைவனுடைய திருமஞ்சனத்துக்குக் காவிரியாற்றிலிருந்து நீர் கொணர்பவர், கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்பவர், கோயிலில், நன்ஓலை வாசிப்பவர், தோட்டக்காரர், கோயிற் கொத்தர், தச்சர், கொல்லர் ஆகியவர்களின் ஊதியங்கள், கோயிலைப் பழுது பார்க்கும் செலவு, மாதப் பிறப்பு, கிரகண தினம் ஆகியவற்றின்போது நிகழும் சிறப்புப் பூசனை, திருநந்தவனத்தைச் சீர் செய்தல், விரிப்புகள் விருதுகள் முதலியவற்றைச்சரிசெய்தல் ஆண்டுதோறும் திருப்பரிவட்டங்களைப் புதுப்பித்தல், திரிபுராந்தகர், ரிஷபதேவர், கணபதி ஆகிய செப்புத் திருமேனிகளுக்குப் பால், தயிர், வெண்ணெய், சர்க்கரை, தேன் என்பவற்றால் முழுக்காட்டும் செலவு, கோயில் வேலையாட்கள் ஓதுவார், குருக்கள், பாடகர், திருக்காரியம் செய்பவர் முதலியவர்களுடைய வீட்டுவசதி ஆகிய செலவினங்களுக்கு வழிவகுத்த திறத்தை இக்கல்வெட்டு விரிவாக விளக்குகிறது.

அக்காலத்து கோயில் ஆட்சிமுறைகளைப் பற்றியும், கோயில் நிர்வாகத்தின் செழுமை பற்றியும், கோயிலில் பணிபுரியும் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு கோயில் நிர்வாகம் மேற்கொண்ட மேதகு முயற்சிகள் குறித்தும் இக்கல்வெட்டால் தெளிவாக உணர முடிகின்றது. இங்குள்ள பிற மன்னர்களின் கல்வெட்டுக்களுள் சில, இக்கோயிலுக்கு அரசியரால் வழங்கப்பட்ட வெள்ளி, செப்பு இவற்றாலான திருமேனிகளைப் பற்றியும், இவ்வூரில் இருந்து கட்டழிந்து போன கோயில்களைப் பற்றியும் செய்திகளைத் தெரிவிக்கின்றது.

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளாக சோழப் பேரரசர்களின் செல்லப் பிள்ளையாய் விளங்கிவந்த இத்திருக்கோயில், இன்று புகழ் மங்கியிருந்தாலும், நன்முறையில் பாதுகாக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. இக்கோயிலின் நிர்வாக அதிகாரி திரு. முத்துக்குமாரசாமியும், இதன் அறங்காவலர் திரு. கோ. சு. இராமனும் நற்பண்புகள் நிறைந்த பேராளர்கள். இவர்களின் மனம் நிறைந்த உழைப்பாலும் இக்கோயிலின் சிவாச்சாரியர் நடராச குருக்களின் இனிய நேயம் நிறைந்த தொண்டாலும், இக்கோயில் பழம்புகழைப் பெற்று பாரில் சிறந்த கோயில்களுள் ஒன்றாய்த் திகழப்போவது உறுதி.



சுவாமிமலை. அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவில் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களுக்கு மலர்முடிசூட்டிச் சிறப்பித்தல். கும்பகோணம் ஒன்றியச்செயலர் திரு. கோ. வி. நாராயணசாமி அவர்கள் உடனுள்ளார்.

உ

# "குடம்பையும், புள்ளும்"

(ந.ரா. முருகவேள், M.A., M.O.L.)

## முன்னுரை :

செந்நாப் புலமைத் திருவள்ளுவர் பெருமான் தலைசிறந்த கவிஞர்; துறைபோய மெய்யுணர்வின் பேரறிஞர்; பல்கலைக் குரிசில். ஒருவர் சிறந்த கவிஞரா எனக் காண்பதற்கு எண்ணற்ற உரை கற்கள் உண்டு. ''எவனும் ஆழ்ந்த மெய்யுணர்வாளனாயிராமல், ஒருபோதும் ஒருயர்ந்த கவிஞனாய் இருந்ததில்லை''* என்ற ஓர் உரைகல்லினை மேனாட்டு ஆசிரியர் ஒருவர் படைக்கின்றார். இவ்வுரை கல்லில் தீட்டிக் காணுங்காலும், உலகப் புகழ்பெற்ற திருவள்ளுவரின் புலமைப் பசும்பொன்னொளி, மாற்றில் உயர்ந்தே துலங்குகின்றது.

திருக்குறளில் கவிதை நலமும், மெய்யுணர்வின் விளக்கமும், மலரும் மணமும் போலவே ஒத்தியைந்து திகழ்கின்றன. கவிதைநலம் பிறங்குமிடத்திலே மெய்யுணர்வு மெலிந்திருப்பது, கண்ணுக்கு இனிமையும், தின்னற்குக் கசப்புமாய பயனில்கனி போன்றது. கவிதை நலமின்றி மெய்யுணர்வு விளக்கம் மட்டும் இருப்பது, உடலுக்கு உரனூட்டினும் நாவிற்குச் சுவையில்லா மருந்து போன்றது. ஆனால், கவிதை நலமும், மெய்யுணர்வின் விளக்கமும் ஒருங்கே விரவித் திகழ்வதோ, நாவிற்கு மட்டுமன்றி உடலுக்கும் பெருநலன் விளைக்கும் இன்னமிழ்தம் போன்றது! இவ்விரு நலமும் ஒருங்குறாமையால் மேனாட்டிலும் நம் நாட்டிலும் எத்தனையோ கவிஞர் பலர் திறனாய்வாளர்களின் போற்றுதலைப் பெறாது போயினர். ஆனால், ஆசிரியர் திருவள்ளுவரோ இவ்விரு பெருநலனும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற பெரும் புலவர். அதனால்தான் அவர் பிற மொழியினராலும் புகழ்ந்து போற்றி வியக்கப் பெறுகின்றார்.

## திருக்குறள் :

இவ்வரும் பெரும் புலமை, திருவள்ளுவர் பெருமான் இயற்றியருளிய திருக்குறள் முழுமையிலும் பரவிக்கிடக்கக் காண்கின்றோம். இவ்வரும் பெறற்புலமை நலத்தின் பெற்றி தெளிய ''ஒரு குழிசிச் சொன்றிக்கு ஒரு சோறு பதமாம்'' என்னும் முறைமைபற்றி, ஒரே ஒரு குறள் மணியினை மட்டும் ஆராய்தலே ஈண்டைக்கு அமையும்.

''குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு''

என்பது திருவள்ளுவரின் திருக்குறள் மணிகளுள் ஒன்று, இது ''நிலையாமை'' என்னும் தலைப்பிற் காணப்படும் மிகச் சிறந்ததொரு கருத்தோவியமாகக் கவினுற்றுத் திகழ்கின்றது.

## நிலையாமை :

உடம்புக்கும் உயிர்க்கும் இடையே நிலவும் தொடர்பினை இத் திருக்குறளின் வாயிலாகத் திருவள்ளுவர் இனிது விளக்கி யருள்கின்றார். ஆசிரியர் மணக்குடவர்,

''கூடு தனியே கிடக்கப் புள்ளு பறந்து
போனாற்போலும்;
உடம்போடு உயிர்க்கு உள்ள நட்பு''

என இத்திருக்குறட்குப் பொருள் காண்கின்றார். ஆனால், ஆசிரியர் பரிமேலழகரோ,

''முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப, அதனுள் இருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து, உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு''

என மணக்குடவரிற் சிறிது வேறுபட்டு உரை வகுக்கின்றார். தம் உரை வேறுபாட்டிற்குப் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கம் கூறுகின்றார்.

''இனி, 'குடம்பை' என்பதற்குக் 'கூடு' என்று உரைப்பாரும் உளர். அது புள்ளுடன் தோன்றாமையானும், அதன்கண் அது மீண்டுபுகுதல் உடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை அறிக''.

* "No man was ever yet a great poet, without being at the sametime a profound Philosopher".
—S. T. Coleridge

## பரிமேலழகர் :

இங்ஙனம் மணக்குடவர் முதலினோர் உரையினை மறுப்பது மட்டுமேயன்றி, இத் திருக்குறட்குப் பரிமேலழகர் வரைந்துள்ள சிறப்புரை பொன்னினும் மணியினும் போற்றத் தகுவதாய்ப் பொலிகின்றது. அவ்வழகிய இனிய சிறப்புரை வருமாறு:

''தனித்தொழிய என்றதனால் முன் தனியாமை பெற்றாம்; அஃதாவது கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாந்துணையும் அதற்கு ஆதாரமாய் நின்றல்; அதனால், அஃது உடம்பிற்கு உவமை யாயிற்று. அதனுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற் போக வின் புள் உயிர்க்கு உவமையாயிற்று. முட்டையுட் பிறப்பன பிறவும் உளவேனும் புள்ளையே கூறினார், பறந்துபோதல் தொழிலான் உயிரோடு ஒப்புமை எய்துவது அதுவே யாகலின். 'நட்பு' என்றது ஈண்டுக் குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போதலை உணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்த மாய உடம்பும் தம்முள் மாறாதலின், வினை வயத்தாற் கூடியதல்லது நட்பில என்பது அறிக''.

## மணக்குடவர் :

ஆசிரியர் பரிமேலழகர் இவ்வழகிய இனிய உரையினால், மணக்குடவரின் உரையினை மறுத்துரைத்துள்ளாராயினும், மணக்குடவர் அங்ஙனம் உரை வரைந்தமைக்கு உரிய காரணமும் இல்லாமற் போகவில்லை. ''குடம்பை'' என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் யாண்டும் 'முட்டை' என்னும் பொருளில் வழங்கப் படாமையினை நினைந்தே 'கூடு' என்று பொருள் கொண்டனராதல் கூடும்.

''மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
யாணர் நரம்பின் சுகிரொடு வயமான்
குரற்செய் பீலியின் இழைத்த குடம்பை''
(புறம் 378)

''வெள்ளியும் இருவிசும்பு ஏர்தரும், புள்ளும்
உயர் சினைக் குடம்பைக் குரல்தோற்
றினவே'' (புறம் 397)

என்பன போன்ற பாடற் பகுதிகளில் 'குடம்பை' என்னும் சொற்குக் 'கூடு' என்னும் பொருளே ஆட்சியில் உள்ளது. மேலும்,

''கேளாதே வந்து கிளைகளாய் இற்றோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்-வாளாதே
சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புள்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து''

எனவரும் நாலடியார் வெண்பாவினை ஆதாரமாகக் கொண்டும், மணக்குடவர் தம் உரையினை வகுத்தனராதல் வேண்டும்.

## மணிவாசகர் :

இனி ஆசிரியர் பரிமேலழகர் 'குடம்பை' என்னும் சொல்லுக்கு 'முட்டை' என்பது நேர் முகப் பொருளன்றாயினும், அதனைக் கொண்டமைக்குரிய காரணம்.

''காண லாம்பரமே கட்கிறந்ததொர்
வாணிலாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பு
எனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாற்றியேன் புலன் போற்றியே''

எனவரும் அரிய திருவாசகத் திருமொழியினை நினைத்து, அதனை ஆதாரமாகக் கொண்டமையே போலும்! மாணிக்கவாசகப் பெருமான் தமது திருவாசகத்துள்,

''உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந்
துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக்
கடத்தலுமே,
இரைமாண்ட இந்திரியப்பறவை இரிந்தோடித்
துரைமாண்ட வாபாடித் தோள்நோக்கம்
ஆடாமோ''

எனப் பிறாண்டும் பறவைகளின் இயல்பு பற்றிக் குறிப்பிட்டிருத்தல் குறிக்கொளற்பாலது. அன்றியும் 'குடம்பை' என்பதன் பிறிதொரு வடிவமாகிய ''குரம்பை'' என்னும் சொல்லை மாணிக்கவாசகர் ''கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே'' ''மலவன் குரம்பையை மாற்றி அம்மால் முதல் வானர்க்கப்பால் செல வன்பர்க் கோக்கும் சிவன்'' என ஆங்காங்கு அருளிச்செய்திருத்தலும் அறிந்தின்புறற்பாலது. எனவே, ''இங்கொர் பார்ப்பு எனப் பாணனேன் படிற்று ஆக்கையை விட்டுனைப் பூணுமாறு அறியேன்'' எனவரும் மாணிக்கவாசகரின் அருமைத் திருமொழியினை ஆதாரமாகக் கொண்டு பரிமேலழகர் 'புள்' என்பதற்குப் 'பார்ப்பு' (பறவைக் குஞ்சு) எனவும், 'குடம்பை' என்பதற்கு 'முட்டை' எனவும் பொருள் கொண்டார் போலும்.

## மரபுநெறி பிறழாமை :

பரிமேலழகரின் இச்சிறப்புரை மிகவும் பாராட்டுற்குரியதே எனினும், மணக்குடவரின் உரையும் மரபுநெறி பிறழாதது ஒன்று என்பது மனங்கொண்டு மகிழ்தற் குரியது. மணக்குடவரின் உரைக்கு,

''அலங்கல் அஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்எழூந் தாங்கு
மெய்யிவண் ஒழியப் போகி, அவர்
செய்வினை மருங்கிற் செலீஇயர் என் உயிரே''
(அகம்-113)

எனவரும் பழஞ்சங்ககாலப் பாடலின் கருத்தும் ஆக்கந் தருவதாதல் காணலாம்.

''பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்
துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்-கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின் பாரே அநுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்''

எனவரும் ஔவையார் பாடலிலும், உடல் 'கூடு' எனவே குறிப்பிடப்பட்ட உண்மை காண்க.

இங்ஙனம் குடம்பை என்னும் சொல்லுக்கு முட்டை எனவும், கூடு எனவும் அவரவர் கருத்திற்கு ஏற்றபடி இரண்டு வகையிலும் பொருள் கொள்ளுதற்குச் சான்றும்வாய்ப்பும் இருத்தலை நன்கு ஆராய்ந்து கடைப்பிடித்தே.

''குடம்பை முட்டையும் கூடும் ஆகும்''

என இருதிறப் பொருளையுமே பின்னைய நிகண்டு நூல் தழுவிக் கொள்ளுவதாயிற்று என்பது, இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குஉரியது.

இன்னோரனையவை பலவும் கருதுங்கால் பண்டையுரையாசிரியர்கள், தாம் காணும் உரை விகற்பங்களுக்கு அரிய சான்றுகள் ஏதேனும் கொண்டன்றித் தத்தம் மனஞ் சென்றவாறு உரை கூறியொழியும் இயல்பினரல்லர் என்பது, நம்மனோரால் நன்கினிது தெளியப்படும்.

## சிறந்த கவிதையின் நலம் :

இவ்வுரைத் திறங்கள் ஒருபுறம் இருப்ப, இத்திருக்குறளால் தெய்வப்புலவர் திருவள்ளுவர் தம் மெய்யுணர்வின் மேம்பாடும், மிகச் சிறந்த கவிதைநலமும் இனையவென்பதும் இனிதறியக் கிடக்கின்றன. குடம்பையும் புள்ளுமாகிய உவமைகள், உடம்பும் உயிருமாகிய இரண்டும் ஒன்றினை யொன்று விட்டு நீங்கும் என, அம்மட்டுமே உணர்த்த வந்துள்ளன என்று உரையாசிரியர்கள் கொண்டிருப்பதாகக் கருத இடமுளது. ஆனால் மிகச் சிறந்த கவிஞரும் மெய்யுணர்வாளருமாகிய திருவள்ளுவர் வேறு பிற கருத்துக்களையும் ஈண்டுக் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

''ஒரு சிறந்த கவிதையில் அமைந்துள்ள ஒவ்வொரு சொல்லும், செவ்விய ஆழ்ந்த பொருட் குறிப்பை உடையதாக விளங்கும். நன்கு சுருதி கூட்டி வைக்கப்பெற்ற யாழின் நரம்பினைக் கலைஞன் ஒருவன் தன் மெல்லிய விரல்களால் தைவந்து திறம்பட மீட்டி விடுப்பின், அதனின்று அலையலையாக இனிய நாதம் எழுந்திசைப்பது போன்று, ஓர் உயர்ந்த கவிதையின் ஒவ்வொரு சொல்லும் அறிஞர்கள் ஆராயுந்தொறும் புதிய புதிய நுண்பொருட் குறிப்புக்களை யுணர்த்தி நிற்கும்''(1)

இங்ஙனம், நுண்ணிய ஆழ்ந்த பொருட் குறிப்புக்களை எண்ணி எண்ணியுணருந்தோறும் புலப்படுமாறு தோற்றிக்கொண்டு நிற்றலே, ஒரு நல்ல கவிதைக்குரிய சிறப்பான இயல்பாகும். ''பளபளப்பு மிக்க வண்ணப் பட்டாடையினைப் போன்றது கவிதை. அவரவர்கள் தத்தம் எண்ணத்திற்குப் பிடித்த வண்ணங்களை அதனின்று எடுத்துக் கொள்ளலாம்'.(2)

''நல்ல கவிதைகள் என்பவை அவரவர்கள் தத்தம் ஆற்றலுக்கும் இயல்புக்கும் மனப்பான்மைக்கும் ஏற்றவகையில் பொருள்கொள்ளும்படி, விரிந்து பரந்துவிளங்கும்''(3)

கடலின்கண் மூழ்கி ஆழமாகச் சென்று முத்துக் குளிப்பவர்கள் முத்தெடுப்பதுபோல, அழகிய இனிய கவிதையாகிய கடலில், சிறந்த அறிஞர்களாகிய முத்துக்குளிப்பவர்கள், தம் நுண்மாண் நுழைபுலனால் ஆழ்ந்து நுணுகிச் சென்று பல அரும்பொருட் குறிப்புக்கள் ஆகிய முத்துக்களைக் கண்டெடுத்து, உலகுக்கு விரித்துரைத்து விளக்குகிறார்கள்.

''தாழ்ந்த நெடுநீர்க் கடலாழம்
சார்ந்து தடவி மிகமுயன்று
வீழ்ந்து தேடி நுளையர்குழாம்
விளையும் மணிகள் கொணர்தலைப்
[போல்,
ஆழ்ந்து பெருநூல் இடைக்கிடந்த
அரிய பொருள்கள் பலவுற்றை
வாழ்ந்த புலமைப் பேரறிஞர்
வகுத்து விளக்கி மகிழ்விப்பர்!
—தழுவற் செய்யுள், ஆசிரியர்.

அதற்கு ஏற்ப, இத்திருக்குறள் நாம் நீள நினைந்து எண்ணுந்தோறும், பல அரிய நுண்ணிய கருத்துக்களைப் புலப்படுத்திக் கொண்டு பொலிவுற்றுத் திகழ்கின்றது.

## மெய்யுணர்வுக் கருத்து :

பறவைகள் கூடு கட்டும் இயல்பினை, நாம் ஊன்றிப் பார்ப்பதில்லை. பறவைகள்தொடக்க முதலே கூடுகட்டி வாழ்வதில்லை. தத்தமக்குரிய இரை தேடியுண்டு மரக்கிளைகளில் வைகிக் கவலையின்றித் தாம் தாம் வேண்டும் இடங்களில் திரிந்து பறந்து, பொழுது கழிப்பதே பறவைகளின் இயற்கை. ஆயினும் சூல் கொண்டு முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் நிலை நேருங்காலத்தில் மட்டுந்தான், பறவைகள் கூடுகட்டி வாழத் தலைப்படும். இவ்வியல்பு,

---

1. "In poetry, each word reverberates like the note of a well-tuned lyre, and always leaves behind it a multitude of vibrations".
— Joubert, Pensees.

2. "Poetry is like shot-silk with many glancing colours. Every reader must find his own interpretations according to his ability and according to his sympathy with the poet."
—Alfred Tennyson

3. "The business of words in prose is primarily to state; in poetry, not only to state, but also (and sometimes primarily) to suggest"
—John Livingston Loues (Lowes).

''சூன்முதிர் துள்ளுநடைப் பெடைக்
கிற்றுணைச் சேவல்செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மென்பூக்
குதர்செம்மல் ஊரன்''

என மணிவாசகர் அருளிய திருக்கோவையார் செய்யுளாலும்,

''உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
மேம்போதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்...''

எனவரும் குறுந்தொகைச் (85) செய்யுளாலும் உணரப்படும். கூடுகட்டிய பறவை அதன்கண் நெடுநாள் தங்குவதில்லை. முட்டையிட்டு அடைகிடந்து குஞ்சுபொரித்து, அக்குஞ்சுகளை வளர்த்த பின்னர், அக்குஞ்சுகளையும்போக்கித் தானும் அக்கூட்டினை விட்டுப் பறந்து போய் விடும்.


ஆணவமல இருளின்கண் அறிவு மயங்கித் திரிதரும் உயிர் ஆகிய பறவையானது, இரு வினைப்போகம் நுகருதற் பொருட்டு இடையே வேண்டப்படும் உடம்பு ஆகிய கூட்டில், கருவுயிர்த்தல் ஆகிய வினைப்பரியாகம் எய்தும் அளவும் வைகியிருந்து, பின்னர் வினைக்கழிவின்கண் விட்டுப் பிரிந்தொழியும் என்னும் மெய்யுணர்வுக் கருத்தும் பிறவும், இத்திருக்குறளில் அமைந்து திகழ்கின்றன. ''வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய் வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்'' என வரும் பட்டினத்தடிகள் திருமொழியும் ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

## முடிவுரை :

இன்னோரனைய அரும்பெருங் கருத்துக்கள் பலவும் அமைய, இவ்வழகிய திருக்குறள் மணியினைச் செவ்விதின் அருளிச் செய்த ஆசிரியர் திருவள்ளுவரின் அளப்பரிய பெருமாட்சிமையை யாம் என்னென்போம்! ''கரையற்ற தொன்றைக் கரை காணலாகுமோ?''



சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவில், தக்கர் திரு இரத்தினசபாபதி அவர்கள் வரவேற்றல்.



சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் திருக்குட முழுக்கு விழாவில், அறநிலையஅமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், 'அருள்மொழியரசு' திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களின் சொற்பொழிவைத் தொடங்கிவைத்தல்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.